# சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

## இலங்கையில் பொதுமக்கள் கருத்தாய்வு

## *"மக்களின் வாழ்வில் கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம்"*

**2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு பொதுமக்கள் கருத்தாய்வில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மக்களின் வாழ்வில் கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் பற்றிய ஓர் அறிக்கையினைச் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை சமர்ப்பிக்கின்றது**

**ஏப்ரல் 2022**

**நன்றி பகர்தல்**

இக்கருத்தாய்வினைப் பொறுப்பேற்றதிலும், இந்த அறிக்கையினைத் தயாரித்ததிலும் பலர் எமக்குத் தாராளமாக உதவியுள்ளனர். இந்த ஆய்வில் கரிசனை கொண்டு இதில் பங்குபற்றிய அனைவருக்கும் நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். ''ஜனநாயக ரீதியான கலந்துரையாடல், முனைப்பான செவிமடுத்தல் மற்றும் உள்ளடக்கும் தன்மையுடைய பிரசைகள் பங்கேற்பு: பெருந்தொற்றின் போதும் சமூக நெருக்கடியின் போதும் உள்ளடக்கும் தன்மையுடைய குடிமக்கள் பங்கேற்புக்கான வாய்ப்புக்களை உருவாக்கல்'' எனும் தலைப்பிலான கருத்திட்டமும் அதன் பகுதியான இக்கருத்தாய்வும் *த ஆசியா பவுண்டேசனின்* (TAF) நிதியுதவி இன்றிச் சாத்தியமாகியிருக்காது.

இரண்டாவதாக, பின்வரும் தனிநபர்களுக்கும் நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்: திரு. நஜா யஹ்யா, Ms. டில்ருக்ஷி கருணாதிலக்க, திரு. ஐ. சிரீன்தாஜ், திரு. என். சுகிர்தராஜ், கலாநிதி அகிலன் கதிர்காமர், கலாநிதி எம். சர்வானந்தன், Dr. சுரேந்திரகுமாரன், Ms. துளசி முத்துலிங்கம், Ms. உனயனி நவரத்னம், Ms. அனுஷானி அழகராஜா, Ms. பத்மினி விஜேசூரிய, திரு. பி. எம். சேனாரத்ன, மாத்தளை, காலி மற்றும் அநுராதபுரம் சவிஸ்திரி கிளைகளின் உறுப்பினர்கள், சர்வோதய கண்டி, முறைசார் பங்கேற்புமிகு ஆய்வுக்கான செயலமர்வில் பங்குபற்றியவர்கள் மற்றும் கருத்தாய்வினை விநியோகித்து பதில்களைச் சேகரிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் மூலம் கருத்தாய்வுக்கு நேரடியாக உதவிய சமுதாய ஆளுகைத் தளத்தினை வலுப்படுத்துவதற்கான செயலமர்வில் பங்குபற்றியவர்கள்.

பங்குபற்றுனர்களின் உதவியின்றி இந்த அறிக்கையினைப் பூர்த்திசெய்திருக்க முடியாது. கடினமான காலப்பகுதியாக இருந்தபோதிலும் இந்தச் செயன்முறையில் சம்பந்தப்பட்ட சகல பங்குபற்றுனர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அறிக்கையினைத் தயாரித்தமைக்காக எமது உளமார்ந்த நன்றிகளைத் திரு. நிலங்க அபேசிங்ஹவுக்கும் Ms. லைலா அல்கசாஸ் தென்னகோனுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். பெருந்தொற்றின் சவால்மிகுந்த ஆரம்ப நாட்களில் பிரசைகளின் அனுபவங்களை உள்வாங்குவதற்காக இந்தக் கருத்தாய்வுக்கு இவர்கள் வழங்கிய கணிசமான பங்களிப்பினை அங்கீகரிக்கின்ற அதேவேளை எதிர்காலக் கருத்தாய்வுகளை மேம்படுத்துவதற்கான இவர்களின் கருத்துக்களையும் நாம் மெச்சுகின்றோம். இந்த அறிக்கையினைத் தயாரிப்பதில் இவர்களின் பங்களிப்புக்கள் அளப்பரியவையாகும்.

முழுவியாபகமான கருத்திட்டத்திற்கும் கருத்தாய்வுக்கும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அணியினரான Ms. இனோமா கருணாதிலக்க (கருத்திட்ட முகாமையாளர்), மைக்கேல் மெண்டிஸ் (ஆய்வாளர்) மற்றும் சகுனா கமகே (ஆய்வாளர்) ஆகியோர் வழங்கிய பங்களிப்புக்களுக்காக விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.

*கலாநிதி சகுந்தலா கதிர்காமர் - நிறைவேற்றுப் பணிப்பாளர்*

## பூரண தொகுப்பு

இலங்கை மக்களின் வாழ்வில் கொவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கங்களை ஆராய்வதற்காகச் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (லோ அன்ட் சொசைட்டி டிரஸ்ட்) நாடு முழுவதிலும் பொதுமக்கள் கருத்தாய்வொன்றினை முன்னெடுத்தது.

கருத்தாய்வு, 40 வினாக்களைப் பயன்படுத்தி மக்களின் தொழில், நிதிகள், சமூக மற்றும் உணர்வுரீதியான வாழ்வு ஆகியவற்றில் கொவிட் நிலைமையின் தாக்கத்தினையும் அத்துடன் இக்காலப்பகுதியில் அவர்களின் நடத்தைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆராய்கின்றது. கருத்தாய்வு 11 தொனிப்பொருட்களைச் சுற்றி வகைபிரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பெருந்தொற்றுக்குப் பின்னரான வருமானம் மற்றும் வேலைச் சூழல், பெருந்தொற்றின்போது போக்குவரத்து, மக்களின் சமூக மற்றும் உணர்வுரீதியான வாழ்க்கை, அவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகள், நிதிக் கரிசனைகள் மற்றும் உதவிக்கான அணுகல் ஆகியவற்றில் கருத்தாய்வு கவனம் குவிக்கின்றது. கொவிட்-19 இற்கு மக்கள் உட்பட்டமை மற்றும் தடுப்பூசியேற்றல் செயன்முறை மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் ஆகியவற்றிலும் கருத்தாய்வு கவனம் குவிக்கின்றது.

15 மாவட்டங்களில் 500 இற்கும் மேற்பட்ட கடதாசிக் கருத்தாய்வுகள் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) விநியோகிக்கப்பட்டன. இவற்றுள் நிரப்பப்பட்ட 374 தரவுத் தாள்கள் (74.80%) மீள ஒப்படைக்கப்பட்டன. 15 மாவட்டங்களும் பின்வருவனவாகும்: கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, கேகாலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம், அம்பாறை, மாத்தறை மற்றும் காலி.

ஆய்வுக்கான பங்குபற்றுனர்கள் பல்வேறு துறைகளில் இருந்தும் தொழில்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களுள் தனியார் துறையிலும் அரசாங்கத் துறையிலும் பணியாற்றுவோர், விவசாயிகள், விலங்கு வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் மற்றும் மீனவச் சமுதாயத்தினர் ஆகியோர் அடங்குகின்றனர். சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் / அரச சார்பற்ற நிறுவனங்களில் மற்றும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவர்களும் இதில் உள்ளடக்கப்பட்டனர். சில பங்குபற்றுனர்கள் சுற்றுலாத் துறையினைச் சேர்ந்தவர்கள், சிலர் சுய தொழில்புரிபவர்கள் மற்றும் சிலர் முறைசாராத் துறையினைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் ஓய்வுபெற்றவர்களும் சில தொழில்வாய்ப்பற்றவர்களும் இடம்பெற்றிருந்தனர்.

மக்களின் வாழ்வில் கொவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கம் பற்றிய தரவுகளை 400 பங்குபற்றுனர்களிடம் இருந்து அணி வெற்றிகரமாகச் சேகரித்தது.

தெரிவுசெய்யப்பட்ட மாதிரியினைப் பொறுத்த அளவில், கொவிட்-19 அவர்களின் தொழில்வாய்ப்பில் சற்றுத் தாக்கம் செலுத்தியிருந்தது. ஆயினும், அளவில் பெரிதான மாதிரியில் அல்லது வெவ்வேறு துறைகளில்

தொழில்புரிபவர்களைக் கொண்ட மாதிரியில் கவனம் குவிக்கும் மற்றொரு ஆய்வில் இருந்து இது கணிசமாக வித்தியாசப்படலாம். மேலும், பலரும் வீடுகளில் இருந்து வேலை செய்யத் தொடங்கிவிட்டனர். இவ்வாறானவர்கள் தங்களின் செயலாற்றுகையில் ஓர் அதிகரிப்பு இருப்பதாகத் தம்மைப் பற்றிய கருத்துக்களைக் குறிப்பிட்டனர்.

இவர்களின் சமூக வாழ்வினை ஆராய்கையில், பங்குபற்றுனர்கள் நாளாந்த அடிப்படையில் தமது நெருங்கிய குடும்ப உறவினர்களுடன் பிரதானமாகத் தொடர்புடையவர்களாக இருப்பது கண்டறியப்பட்டதுடன் இவர்களுக்கு ஏதாவது உதவிகள் தேவைப்படுகையில் அல்லது தமது கவலைகளைப் பகிர்வதற்கு இவ்வாறான உறவினர்களை அல்லது நண்பர்களை நாடும் சாத்தியத்தினை இவர்கள் கொண்டிருந்தனர்.

கருத்தாய்வில் பங்குபற்றிய பங்குபற்றுனர்களின் மத்தியில் நிதி நிலைமைகள் பிரதான கரிசனைக்குரிய விடயமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. இவர்களில் பலர் பெருந்தொற்றின் பின்னர் குடும்பச் செலவுகளுக்குக் கஷ்டப்படுவதையும் பலர் தங்களின் வாழ்க்கைச் செலவுகளுக்கு உதவுவதற்காகக் கடன்களைப் பெற்றிருப்பதையும் காண முடிந்தது. நெருக்கடியின் போது, பெருந்தொற்றில் இருந்து தப்புவதற்குத் தமக்கு ஏனைய நிறுவனங்களிடம் இருந்து உதவிகள் கிடைத்ததாகக் குறிப்பிட்டவர்கள், அரசாங்கத்தின் உதவியே மிகவும் அணுகக்கூடியதாக இருந்ததாகக் குறிப்பிட்டனர். ஆயினும், அதிகளவான பங்குபற்றுனர்கள் தமக்கு எவ்விதமான உதவியும் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டனர். மேலும், சமுதாய மட்ட நடவடிக்கைகள் அல்லது பெருந்தொற்றினை முகாமைத்துவம் செய்வதற்கான பொதுமக்கள் விழிப்புணர்வு சனத்தொகையின் 1/5 இனைச் சென்றடையவில்லை. மேலும் இந்த எண்ணிக்கையானது தொடர்பாடல்களிலும் இணைப்புநிலையிலும் ஓர் இடைவெளி இருப்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

கொவிட்-19 இன் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு பதிற்செயற்பாடாற்றுவதற்காகப் புதிய பழக்கவழக்கங்களை கூட்டிணைத்து, சில முன்னைய நடைமுறைகளைக் கைவிட்டதுடன் எமது நடத்தைகளில் பலவும் மாறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. பொறுப்புவாய்ந்த பிரசைகள் என்ற ரீதியில் இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் பங்குபற்றுனர்களினால் அவர்களின் பொதுவான கருத்துக்களில் மேலும் கோடிட்டுக்காட்டப்பட்டன. எனவே, பெருந்தொற்றுச் சில சாதகமான நடத்தைரீதியான மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

பிரசைகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி, பெருந்தொற்றின் போது அவர்கள் பெற்றுக்கொண்ட சாதகமான மற்றும் பாதகமான அனுபவங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதே இந்தக் கருத்தாய்வின் நோக்கமாகும். இது அவர்களின் போராட்டங்கள், சவால்கள் மற்றும் மீண்டெழுந்தன்மை பற்றிய நுழைபுலங்களை வழங்குகின்றது.

இந்தத் தகவல்களைப் புத்திசாதுர்யமாகப் பயன்படுத்துகையில், சமுதாயத்தின் தேவைகளுக்கு பதிற்செயற்பாடாற்றும் அரச கொள்கைகளை உருவாக்குவதற்கு அவற்றினால் உதவ முடியும். பெருந்தொற்றின் போது,

மக்களுடன் இருந்து அவர்களின் கதைகளைக் கேட்பதற்கான சாத்தியம் இல்லாதிருந்தபோது, கருத்தாய்வு அவ்வாறான வாய்ப்புக்கான ஒரு சாளரத்தினைத் திறந்துள்ளது.

# முறையியல்

***அறிமுகம்***

இந்த ஆய்வின் முறையியல் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்த ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட தரவுச் சேகரிப்பு உத்திகளை இந்தப் பிரிவு ஆராயும். மேலும் பங்குபற்றுனர்களின் தெரிவு பற்றிய விபரிப்பினை இது உள்ளடக்குவதுடன் கருத்தாய்வு முறையினையும் ஆராயும்.

***வடிவமைப்பு***

இந்த ஆய்வு பின்வரும் ஆய்வு வினாவிற்கு பதிலளிக்கும் தேவையினை நிறைவேற்றும்: "மக்களின் வாழ்வில் கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கத்தினை ஆராய்தல்." பெருந்தொற்றின் போதான மக்களின் தனிப்பட்ட அனுபவங்களையும் உணர்வுகளையும் பற்றிய ஆழமான புரிதலைப் பெற்றுக்கொள்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். எனவே, இலக்குக் குழுக் கலந்துரையாடல்களுடனும் (FGD) ஆழமான நேர்காணல்களுடனும் சேர்த்து ஒரு கருத்தாய்வு வினாக்கொத்தினைப் பயன்படுத்துவதே ஆரம்பத் திட்டமாகும். ஆயினும், அடிக்கடி முழுமுடக்கம் பிரகடனப்படுத்தப்பட்டமையால் ஆய்வணியினரின் நேர்காணல்களுக்கும் இலக்குக் குழுக் கலந்துரையாடல்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. மேலும், தொற்றுக்களின் வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் அடிக்கடி பிரகடனப்படுத்தப்பட்ட முழுமுடக்கத்தினாலும் கருத்தாய்வினை நடத்துவதும் பாதிக்கப்பட்டது. சுகாதார ஆலோசனை அறிவுறுத்தல்களின் காரணமாக இந்த ஆய்வில் தரவுச் சேகரிப்பு முறையாகக் கருத்தாய்வு மாத்திரமே பயன்படுத்தப்பட்டது.

வினாக்கொத்துக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் கொவிட் நிலைமை தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்தான தகவல்களைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நேர மட்டுப்பாடுகள் காரணமாக, கொவிடில் கவனம் குவித்து ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த வினாக்கொத்துக்களில் சிலவற்றினைப் பயன்படுத்தி வினாக்கொத்துத் தயாரிக்கப்பட்டதுடன், கருத்தாய்வு இலக்குகளில் கவனம் குவிப்பதற்காக அவை மீள உருவாக்கப்பட்டன. பங்குபற்றுனர்களின் வாழ்க்கை யதார்த்தங்களையும் அனுபவங்களையும் அவர்களின் மனோ நிலையினையும் அடையாளம் காணும் நோக்கத்துடன் வினாக்கள் உருவாக்கப்பட்டன.

நேர மட்டுப்பாடு காரணமாக, வினாக்கொத்து ஒரு வாரத்தினுள் உருவாக்கப்பட்டு தேசிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. எனவே, வினாக்கொத்து பரிசீலிப்புச் செயன்முறைக்கு உட்படவில்லை.

### *பங்குபற்றுனர்களின் தெரிவு*

கிராமிய சமூகம் மற்றும் நகரத்துச் சமூகம் எனும் பரந்த சூழமைவினுள்ளேயே இந்த ஆய்வு நடத்தப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளைப் பேசும் மக்கள் ஆய்வில் பங்குபற்றியிருந்தனர். இனத்துவம் என்ற அடிப்படையில் கொவிட் ஏற்படுத்திய தாக்கத்தின் மீது கவனம் குவிக்கும் வகையில் ஆய்வு வடிவமைக்கப்படவில்லை. மேலும், கிராமங்களிலும் நகரங்களிலும் வாழும் சகல வெவ்வேறு இனத்துவச் சமுதாயங்களின் கருத்துக்களும் இந்த ஆய்வில் அவசியமாகப் பிரதிபலிக்கப்படவில்லை.

பெருந்தொற்றின் தாக்கத்திலும் அது மக்களின் நாளாந்த வாழ்வினைப் பொதுவாக எவ்வாறு பாதிக்கின்றது என்பதிலும் ஆய்வு கவனம் குவித்தாலும், வெவ்வேறு சமூக-பொருளாதாரக் குழுக்களைப் பெருந்தொற்று எவ்வாறு பாதித்துள்ளது என்பதை ஆய்வு பகுப்பாய்வு செய்யவில்லை.

பெருந்தொற்றின் போது மக்கள் எவ்வாறு உணர்ந்தனர் என்பதில் ஆய்வு கவனம் குவிக்கின்றது. – அவர்களின் உணர்வுகளையும் புலனுணர்வுகளையும் அனுபவங்களையும் உள்வாங்க ஆய்வு முயற்சித்தது.

சிவில் சமூக அமைப்புக்களின் வலையமைப்புக்கள் மூலமும் தனிப்பட்ட தொடர்புகள் மூலமும் பதிலளிப்பவர்கள் அணுகப்பட்டனர். ஆய்வின் நோக்கம் அவர்களுக்கு விளக்கப்பட்டு பங்குபற்றல் தன்னார்வத்துடனும் அநாமதேயமாகவும் இடம்பெற்றது. கருத்தாய்வு வினாக்கொத்தினைப் பூர்த்திசெய்ததன் மூலம் ஆய்வில் பங்குபற்றுவதற்கான அறிந்து வழங்கும் இணக்கத்தினைப் பங்குபற்றுனர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட அதேவேளை, அனைத்து ஆய்வுத் தரவுகளும் இரகசியமாகக் கையாளப்படும் என்ற உத்தரவாதம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. சகல பங்குபற்றுனர்களும் அறிந்துவழங்கும் இணக்கப் படிவத்தினைப் பூர்த்திசெய்யவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டனர்.

### *தரவுச் சேகரிப்பு உத்தி*

ஆய்வாளர் ஒருவரினால் தெரிவுசெய்யப்படும் தரவுச் சேகரிப்பு உத்தி எவ்வகையான தரவு சேகரிக்கப்படுகின்றது என்பதைத் தீர்மானிக்கின்றது. எனவே ஆய்வில் இருந்து பெற்றுக்கொண்ட பெறுபேறுகளிலும் முடிவுகளிலும் இது செல்வாக்குச் செலுத்துகின்றது.

இதனை அடையாளங்கண்டு, கருத்தாய்வு வினாக்கொத்தினை விநியோகித்து அவற்றினைச் சேகரிப்பதற்குப் பல தனிநபர்களை ஆய்வு அணி நியமித்திருந்தது. கருத்தாய்வுகளை நடத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட உதவியாளர்களுடன் ஆய்வணி பல சந்திப்புக்களை முற்கூட்டியே நடத்தியிருந்தது. அவர்களும் ஆய்வுச் செயன்முறை

தொடர்பாகத் தொலைபேசி மூலம் பல கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். வினாக்கொத்துக்களில் சில கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மாத்தளை போன்ற நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட செயலமர்வுகளில் பூர்த்திசெய்யப்பட்டன. இந்த வினாக்கொத்துக்களில் அதிகமானவை சமுதாயத்தின் அடிமட்டத்தினைச் சேர்ந்த பிரசைகளின் மத்தியில் விநியோகிக்கப்பட்டு பின்னர் சேகரிக்கப்பட்டன.

பங்குபற்றுனர்களின் பின்புலம் தொடர்பான சுயவிபரத் தரவுகள், அவர்களின் வயது, பால்நிலை, திருமண அந்தஸ்து மற்றும் தொழில் போன்ற உண்மைத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டமைக்கப்பட்ட வினாக்களைக கருத்தாய்வின் முதல் பகுதி கொண்டிருந்தது. இது பெறுமதி சேர்க்காததாகும்.

வினாக்கொத்தின் இரண்டாம் பகுதி பெருந்தொற்று எவ்வாறு அவர்களின் தொழில்களைப் பாதித்தது என்பது தொடர்பான மற்றும் இந்தப் பெருந்தொற்றின் போது, குறிப்பாக முழுமுடக்கக் காலப்பகுதியின் போது, அவர்கள் எவ்வாறு அவர்களின் வேலைத்தளக் கடமைகளை முகாமைத்துவம் செய்தனர் என்பது தொடர்பான வினாக்களைக் கொண்டிருந்தது.

மூன்றாம் பகுதியானது உறவுகள், இணைப்புக்கள், மகிழ்ச்சி, அன்பு மற்றும் நலனோம்புகை தொடர்பான வினாக்களைக் கொண்டிருந்தது.

நான்காம் பகுதியானது வேலைத்தளச் செயலாற்றுகை மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பான வினாக்களையும் ஐந்தாம் பகுதி கொவிட் பெருந்தொற்றின் போது அவர்களின் சமூக வாழ்க்கை பற்றிய வினா்களையும் கொண்டிருந்தது.

ஏழாம், எட்டாம் மற்றும் ஒன்பதாம் பகுதிகள் வாழ்க்கை மற்றும் நிதி நிலைமைகள் பற்றிய கேள்விகளையும் பிள்ளைகளின் கல்விச் செலவுகள் பற்றிய கேள்விகளையும் கொண்டிருந்தன. இறுதியாக, பெருந்தொற்றின் போது அரசாங்கத்தின் ஆதரவு பற்றிய கேள்விகளும் நீண்ட கால முழுமுடக்கத்தின் உளவியல் ரீதியான தாக்கம் பற்றிய கேள்விகளும் காணப்பட்டன.

***வரம்புகள்***

கருத்தாய்வு வினாக்கள் மாதிரிப் பரிசோதனைச் செயன்முறையின் மூலம் அங்கீகரிக்கப்படவில்லை. மொழிபெயர்ப்புகளும் பரிசீலித்து அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, பெறுபேறுகள் பங்குபற்றுனர்களின் அறிவு மட்டத்திலேயே தங்கியிருந்தன. இது பிரதான வரம்புகளில் ஒன்றாகும்.

பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டபோது, சில வினாக்கள் தெளிவற்றவையாக இருந்தமை இறுதியில் சுட்டிக்காட்டப்பட்டது அல்லது அட்டவணைப்படுத்தக் கடினமான சிக்கலான பதில்களை அவை பெற்றுத்தந்தன.

கிராமப் பிரதேசங்களில் வாழும் பங்குபற்றுனர்கள், குறிப்பாகக் கடினமான புவியியல் பிரதேசங்களில் வாழும் பங்குபற்றுனர்கள் அவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளின் காரணமாக நகரப் பிரதேசங்களிலும் புறநகர்ப் பிரதேசங்களிலும் வாழும் மக்களை விட வித்தியாசமான உளவியல் எத்தனங்களை வெளிப்படுத்தலாம் என்பது சாத்தியமானதாகும். பெருந்தொற்றின் தாக்கம் பற்றிய தரவுகளைச் சேகரிக்கையில், பங்குபற்றுனர்களின் எழுத்தறிவு மட்டத்தினைக் கருத்தாய்வு ஒரு காரணியாகக் கொள்ளவில்லை என்பதுடன் ஏனைய பேச்சுவழக்கு மொழிகளைப் பயன்படுத்துவதற்கான தேவையினையும் ஒரு காரணியாகக் கொள்ளவில்லை.

மேலும், கொவிட் அதிகரிப்பின் காரணமாக அமுல்படுத்தப்பட்ட எதிர்பாராத முழுமுடக்கம் காரணமாகவும் பயணத் தடைகள் காரணமாகவும் இந்த ஆய்வுக்குச் சில கட்டுப்பாடுகள் இருந்தன. இறுதியாக, நாட்டு நிலைமை காரணமாகவும் ஆய்வாளர்கள் இந்த இலக்கினை அடைவதற்கு அதிக நேரத்தினைச் செலவழிக்க நேரிட்டதாலும் வினாக்கொத்தினைச் சேகரிப்பதும் விநியோகிப்பதும் பெரிய சவாலாக இருந்தது.

### *நெறிசார் கருதுகோள்கள்*

ஆய்வின் நடவடிக்கைமுறைகள் பதிலளிப்போரின் அந்தரங்கம், நலனோம்புகை, சிவில் உரிமைகள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றினைப் போதிய அளவில் பேணிவந்தன. பதிலளித்த அனைவருக்கும் அவர்களின் பங்கேற்பும் அவர்கள் வழங்கிய பதில்களும் இரகசியமாகப் பேணப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டது. பெறுபேறுகளில் எத்தனிநபரும் அல்லது தனிப்பட்ட வேலைத்தளமும் அடையாளம் காணப்படவில்லை.

உள்ளடக்கம்

நன்றி பகர்தல் .......... 2

Kiwapay; .......... 2

அறிமுகம் .......... 2

1. சமூகக் குடிப்பரம்பல் மற்றும் தொழில் பண்புகள் .......... 3
2. பெருந்தொற்றுக்குப் பின்னரான வருமானம் மற்றும் வேலைச் சூழல் .......... 5
3. பெருந்தொற்றின்போது போக்குவரத்து .......... 10
4. சமூக வாழ்வு .......... 11
5. உணர்வுபூர்வமான வாழ்க்கை .......... 17
6. வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள் .......... 18
7. நிதி நிலைமைகள் .......... 21
8. உதவிக்கான அணுகல் .......... 26
9. கொவிட்-19 விழிப்புணர்வும் அறிவும் .......... 27
10. உதவி நடவடிக்கைகளும் நடத்தையும் .......... 27
11. கொவிட்-19 தொற்றும் தடுப்பூசியேற்றலும் .......... 36
12. பொதுவான கருத்துக்கள் .......... 39

முடிவு .......... 42

உசாவல்கள் .......... 44

## அறிமுகம்

கொரோனா வைரஸ் (கொவிட்-19) முதன் முறையாகச் சீனாவின் வுஹானில் 2019 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டது. சில நாட்களிலேயே இது உலகம் முழுவதும் பரவி, பாரிய அதிர்ச்சியினை ஏற்படுத்தி, எமது நாளாந்த வாழ்வில் கணிசமான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு எம்மைத் தேவைப்படுத்தியது. உலக சுகாதார ஸ்தாபனம் சர்வதேசப் பொதுச் சுகாதார அவசரநிலையினைப் பிரகடனப்படுத்துவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் இலங்கையில் முதலாவது தொற்றாளர் 2020 ஜனவரி 27 இல் அடையாளம் காணப்பட்டார்.

உலகளாவிய பெருந்தொற்றின் தாக்கம் மிகக் கடுமையானதாக இருந்தது. ஆனால் அது உலக சனத்தொகையின் சுகாதாரத்திற்கு மட்டுப்படுத்தப்படவில்லை. ஐக்கிய நாடுகள் குறிப்பிட்டவாறு, *"கொவிட்-19 நெருக்கடி சுகாதார நெருக்கடியினையும் தாண்டிச் செல்லும் ஒன்றாகும்: அது சமூகங்களையும் பொருளாதாரங்களையும் வேரிலேயே ஆட்டங்காண வைத்திருக்கின்றது"* (ஐக்கிய நாடுகள், 2020).

கீழ் - நடுத்தர – வருமானம் பெறும் நாடு என வகைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தினை நிலைக்கச் செய்வதற்குச் சுற்றுலாத்துறை போன்ற தொழிற்துறைகள் கணிசமான பாகத்தினை வகிக்கும் நிலையில் குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் சடுதியாக ஸ்தம்பித்துவிட்டன. இதே நிலையே பெருந்தொற்றில் இருந்து நிலவி வருகின்றது. பெருந்தொற்றினைத் தொடர்ந்து ஒரு குடும்பத்தின் சராசரி வருமானம் 21% இற்கும் 31% இற்கும் இடையில் குறைந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டு, கிடைக்கின்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை பற்றிய யுனிசெப் அறிக்கை ஊகங்களை வெளியிட்டுள்ளது (மே 2020).


எனவே, இலங்கை மக்களின் வாழ்வில் கொவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைப் பற்றி ஆராய்வதற்காக இலங்கையின் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (எல்எஸ்டி) நாடு முழுவதிலும் பொதுமக்கள் கருத்தாய்வு ஒன்றினை முன்னெடுத்துள்ளது.

40 வினாக்களைப் பயன்படுத்தும் இக்கருத்தாய்வு, பொதுமக்களின் தொழில், நிதி விளைவுகள், அவர்களின் சமூக மற்றும் உணர்வு நிலையின் மீதான தாக்கம், இக்காலப்பகுதியில் அவர்களின் நடத்தைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றினைப் பற்றி ஆராய்கின்றது. 500 இற்கும் மேற்பட்ட கடதாசிக் கருத்தாய்வுகள் (சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாவட்டங்களின் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. இவற்றுள் நிரப்பப்பட்ட 374 தரவுத் தாள்கள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன (74.80%).

## 1. சமூகக் குடிப்பரம்பல் மற்றும் தொழில் பண்புகள்

கருத்தாய்வில் பங்குபற்றுனர்கள் பங்குபற்றிய மாவட்டங்களின் பட்டியல் கீழே வழங்கப்பட்டுள்ளது. அதிகமான பங்குபற்றுனர்கள் கண்டிப் பிரதேசத்தில் இருந்து அறிக்கையிடப்பட்டுள்ளனர். இவர்கள் சனத்தொகையில் 23% ஆக இருந்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து 15.5% ஆன பங்குபற்றுனர்களும் அம்பாறை மற்றும் மாத்தளையில் இருந்து முறையே 13% மற்றும் 12.8% ஆனவர்களும் பங்குபற்றியிருந்தனர். கொழும்பில் இருந்து பங்குபற்றியவர்களின் விகிதாசாரம் 9.8% ஆகும்.

1. கொழும்பு
2. கம்பஹா
3. களுத்துறை
4. கண்டி
5. மாத்தளை
6. கேகாலை
7. யாழ்ப்பாணம்
8. கிளிநொச்சி
9. மன்னார்
10. முல்லைத்தீவு
11. வவுனியா
12. அநுராதபுரம்
13. அம்பாறை
14. மாத்தறை
15. காலி




1: gq;Fgw;Wdu;fspd; khtl;lq;fs;


கிட்டத்தட்ட 38% ஆண்கள் மற்றும் 59% பெண்கள் எனப் **பால்நிலைப்** பரம்பல் அமைந்திருந்தது. பங்குபற்றுனர்களின் **வயதுக்** குழு 19 முதல் 82 வரை காணப்பட்டது. மிகப் பொதுவான வயதுக் குழு 35 முதல் 50 வரை காணப்பட்டது.

**தொழில் மற்றும் வருமான நிலை**

ஆய்வில் பங்குபற்றிய பெரும்பான்மையானவர்கள் தனியார் துறையில் அல்லது அரசாங்கத் துறையில் தொழில்புரிபவர்களாக இருந்தனர் (15.9%; 15.6%). பங்குபற்றுனர்களில் 10.6% ஆனோர் விவசாயிகளாக இருந்தனர் மற்றும் / அல்லது விலங்கு வளர்ப்பில் ஈடுபடுவோராக இருந்தனர். 4.8% ஆனோர் மீனவர்கள். INGO/NGO தொடர்பான தொழில்களில் பங்குபற்றுனர்களில் 7.4% ஆனோர் ஈடுபட்டிருந்தனர். 5.3% எனும் சிறு எண்ணிக்கையானவர்கள் கல்வி நிறுவனங்களில் தொழில்புரிந்தனர். அதேவேளை மிகச் சிறிய அளவிலானவர்கள் (1.9%) சுற்றுலாத் துறையில் தொழில் புரிந்தனர்.

"சுய தொழில் புரிவோராக" அறிக்கையிட்டோரின் (11.1%), மிகப் பொதுவான சுய தொழில்களாகத் தையல் தொழிலும் / ஆடை தைப்பதும் விற்பனைக்காகச் சமைத்த உணவுகளைத் தயாரிப்பதும் காணப்பட்டன. "ஏனைய" வகைகளுள் மிகவும் அடையாளம் காணப்பட்ட தொழில் வகைகளாகப் பங்குபற்றுனர்களில் 12.7% ஆனோர் நாட்கூலிகளாகவும் முச்சக்கர வண்டி ஓட்டுபவர்களாகவும் சில்லறைக் கடைகள் அல்லது உணவு விடுதிகளில் தொழில்புரிவோராகவும் உள்ளனர்.

அனைத்துப் பங்குபற்றுனர்களிலும் 3.5% ஆனோர் ஓய்வுபெற்றவர்களாக (1.9%) அல்லது தொழில்வாய்ப்பற்றவர்களாக (1.6%) இருந்தனர்




**உரு 2: தொழில் மற்றும் பின்புலம்**

பங்குபற்றுனர்களில் அதிகமானவர்கள் (49.1%) மாதாந்த வருமானம் பெறுவோராக இருந்தனர். ஏனையோர் நாளாந்த வருமானத்திலும் (12.7%) பருவகால வருமானத்திலும் (12.5%) தங்கியிருப்போராக இருந்தனர். இதில் பயிர்ச்செய்கைக்காக பருவங்களில் தங்கியிருக்கும் விவசாயமும் பருவகாலத் துறையான சுற்றுலாத்துறை போன்ற தொழிற்துறைகளும் உள்ளடங்கியிருந்தன. பருவகாலச் சுற்றுலாத்துறை சிறு கடைகளையும் பாதிக்கின்றது. இக்கடைகளில் 3.7% ஆனவை வாராந்த வருமானத்தில் தங்கியுள்ளன.


## 2. பெருந்தொற்றுக்குப் பின்னரான வருமானம் மற்றும் வேலைச் சூழல்

பெருந்தொற்று ஏற்பட்டதில் இருந்து, வைரசின் பரவலைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக அரசாங்கத்தினால் உத்தரவிடப்பட்ட முழுமுடக்கத்துடனும் தொற்றுத்தடைகாப்புக் காலப்பகுதிகளுடனும் வீட்டில் இருந்து வேலைசெய்தல் எனும் கருத்தியலின் அறிமுகத்துடனும் வேலைச் சூழலும் கட்டமைப்புக்களும் மாறத் தொடங்கின. இந்தக் காரணிகளைக் கருத்தில் கொள்கையில் வருமானத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாகவும் வேலைச் சுமை தொடர்பாகவும் வீட்டில் இருந்து வேலை செய்தல் கட்டமைப்பின் கீழ் செயலாற்றுகை மற்றும் பெற்றுக்கொண்ட உதவி தொடர்பாகவும் பல வினாக்கள் தொடுக்கப்பட்டன.

*“கொவிட்-19 இனால் தொழில்வாய்ப்பு மட்டத்தில்/சம்பள மட்டத்தில் குறைவு ஏற்பட்டதா”* என்ற கேள்விக்குப் பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் (49%) தாம் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அதேவேளை 42% ஆனோர் வேறு விதமாகக் குறிப்பிட்டனர். பதிலளித்தவர்களின் பதில்களுக்கு அமைவாகத் தெரிவுசெய்யப்பட்ட பங்குபற்றுனர்களுக்கு கொவிட் நிலைமையினால் தொழில்வாய்ப்பிலும் வருமான மட்டத்திலும் கணிசமான பாதிப்பு ஏற்படவில்லை என்பது தெரியவந்தது. ஆயினும், இலங்கை மக்கள் தொடர்பான பரந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகையில் நாம் வித்தியாசமான பெறுபேற்றினைப் பெறலாம்.


கொவிட்-19 இனால் தமது தொழில் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டவர்களின் மத்தியில் இதற்கான பல காரணங்கள் அடையாளம் காணப்பட்டன. கீழேயுள்ள அட்டவணைக்கு அமைவாக, பங்குபற்றுனர்களில் 51.8% ஆனோர் தாம் இன்னும் தொழில்புரியும் அதேவேளை தமது வருமானம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர். ஏனையோர் வேலைகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர் அல்லது சம்பளமின்றிய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளனர் (7.4%). ஏனையோர் பாடசாலை செல்லாத பிள்ளைகளைக் (18.8%) கவனிப்பதற்காக அல்லது கொவிட் ஏற்பட்டவர்களைப் பராமரிப்பதற்காக அல்லது முதியவர்களைப் பராமரிப்பதற்காக வீடுகளில் தங்கிவிட்டனர். மீன்பிடியிலும் பயிர்ச்செய்கையிலும் கொவிட் நிலைமையின் தாக்கம் போன்ற ஏனைய சில காரணிகளும் குறைக்கப்பட்ட வருமான ஈட்டல் ஆற்றல்களுக்குப்

பங்களிப்பு வழங்கியிருந்தன. மேலும் மக்களினால் அவர்களின் உற்பத்திகளை விற்க முடியவில்லை. அத்துடன் முழுமுடக்கத்தின் காரணமாகவும் செலவுக் குறைப்புக்கள் காரணமாகவும் நாட்கூலிகளாக வேலை செய்வோருக்கான கிராக்கி குறைவாகக் காணப்பட்டது.




**உரு 3: தொழில்வாய்ப்பின்மைக்கான காரணங்கள்**


கருத்தாய்வுக்கு அமைவாக, சராசரியாகத் தமது வேலைப்பளு பெருந்தொற்றுக்கு முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் தற்போது குறைவடைந்துள்ளதாகப் பங்குபற்றுனர்களில் பெரும்பான்மையானவர்கள் குறிப்பிட்டனர்.




**உரு 4: பெருந்தொற்றுக்குப் பின்னரான வேலைப்பளு**


வீட்டில் இருந்து வேலை செய்வது என்பது உங்களைச் சுற்றியுள்ளவர்களின் ஆதரவினையும் சாதனங்கள் மற்றும் தொடர்பேற்படுத்தக்கூடிய தன்மை போன்ற வளங்களுக்கான அணுகலையும் தேவைப்படுத்துகின்றது. குடும்பங்களின் உதவி தொடர்பிலும் சிரேஷ்ட முகாமைத்துவத்திடமிருந்தான உதவி தொடர்பிலும் வேலைத்தளச் சக ஊழியர்களிடம் இருந்தான உதவி தொடர்பிலும் பங்குபற்றுனர்கள் எவ்வளவு திருப்தியடைந்துள்ளனர் என்று

கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் வீட்டில் இருந்து வேலையில் ஈடுபடுகையில் கிடைத்த உதவிகளின் தன்மை பற்றி நடுநிலைமை வகித்தனர்.




**உரு 5: பெற்றுக்கொண்ட உதவி**

வீட்டில் இருந்து வேலை செய்வதற்குத் தேவைப்படும் வளங்கள் தொடர்பில் நோக்குகையில், தரவுப் பயன்பாட்டுக்கு ஆகும் செலவு பற்றிப் பங்குபற்றுனர்களில் பெரும்பான்மையானவர்கள் அதிருப்தி வெளியிட்டனர். கருத்தாய்வின்படி, அணுகக்கூடியதன்மை என்பது தரவுக்கான அணுகலாகவே ஊகிக்கப்பட்டது. கருத்தாய்வுக்கான பதில்கள் இந்த விடயத்தில் நடுநிலையான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தன. செயற்திறன்மிக்க தன்மை என்பதைப் பெரும்பான்மையானவர்கள் நடுநிலையானதாகத் தரமிட்ட அதேவேளை, பின்னர் கண்டறியப்பட்டமை பற்றி அவதானமாக இருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. "செயற்திறன்மிக்க தன்மை" என்பது குறித்துரைக்கப்படவில்லை என்பதால் இது குழப்பத்திற்கு மற்றும் வெவ்வேறான அர்த்தப்படுத்தலுக்கும் உட்பட்டிருக்கலாம்.




**உரு 6: உதவி வளங்கள்**

வீட்டில் இருந்து வேலை செய்தல் முறைமை தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் அதில் இருந்து பெற்றுக்கொண்ட முடிவுகள் அவதானத்துடன் கையாளப்பட வேண்டும் என்பது கட்டாயம் கோடிட்டுக் காட்டப்படவேண்டும். ஏனெனில் விவசாயம், கடற்றொழில், டாக்சி ஓட்டுதல் போன்ற வீட்டில் இருந்து வேலை செய்யாத துறைகளைச் சேர்ந்த பங்குபற்றுனர்களும் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

புதிய வேலைச் சூழல் மற்றும் வேலை செய்யும் முறை தொடர்பாக நோக்குகையில், கொவிட்-19 இற்கு முன்னருடன் ஒப்பிடுகையில் வேலைச் செயலாற்றுகை தொடர்பான பங்குபற்றுனர்களின் அகவயமான மதிப்பீடு தொடர்பான கூற்றுக்களுடன் அவர்கள் எந்த அளவிற்கு இணங்குகின்றனர் எனக் கேட்கப்பட்டனர். சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்களில், பெரும்பான்மையானவர்கள் நடுநிலை மட்டத்திலான உடன்பாட்டினைத் தெரிவுசெய்திருந்தனர். ஆயினும், அலுவலகத்தில் வேலைசெய்வதுடன் ஒப்பிடுகையில் வீட்டில் இருந்து வேலைசெய்வது கடினமானது என்பதைப் பங்குபற்றுனர்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொண்டனர் (15.6%). ஆனால், அவர்கள் புதிய வேலைச் சூழலுக்கு நன்கு தகவமைத்துக்கொண்டனர் (20.4). அதேவேளை, வீட்டில் இருந்து வேலை செய்வதிலுள்ள சவால்களையும் புரிந்துகொண்டுள்ளனர் (15.9%). முழுமுடக்கத்தில் இருந்து தங்களின் செயலாற்றுகை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதைப் பலரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆயினும், பங்குபற்றியவர்களுள் கிட்டத்தட்ட 11.5% ஆனோரைப் பொறுத்த அளவில் இந்தக் கூற்று பொருத்தமானதல்ல. முன்பு குறிப்பிட்டதைப் போன்று அவர்கள் ஓய்வுபெற்றவர்களாகவோ அல்லது தொழிலற்றவர்களாகவோ இருக்கலாம் என்பதால் அவர்களின் தொழிற்துறைக்கு வீட்டில் இருந்து வேலை செய்தல் எனும் கருத்தியல் பொருத்தமற்றதாகும்.

**அட்டவணை 1**

*வேலைச் செயலாற்றுகையில் ஏற்பட்ட மாற்றங்கள்*


| **கூற்று** | உறுதியாக இணங்கவில்லை | இணங்கவில்லை | நடுநிலை | இணங்குகிறேன் | உறுதியாக இணங்கவில்லை | பொருத்தமற்றது |
|---|---|---|---|---|---|---|
| *அலுவலகத்துடன் ஒப்பிடுகையில் வீட்டில் இருக்கையில் வேலையில் கவனம் குவிப்பது எனக்குக் கடினமானதாக இருக்கின்றது* | 1.3 | 6.9 | 19.9 | 15.6 | 3.7 | 12.7 |
| *முழுமுடக்கக் காலப்பகுதியின்போது எனது செயலாற்றுகை முன்னேறியிருக்கின்றது* | 2.1 | 9.5 | 27.6 | 9 | 1.1 | 11.7 |
| *முழுமுடக்கம் ஏற்பட்டதில் இருந்து எனது செயலாற்றுகை மோசமடைந்திருக்கின்றது* | 4.5 | 16.2 | 17.2 | 6.6 | 4 | 12.2 |
| *புதிய வேலை முறைகள் மற்றும் கற்றல் அனுபவத்திற்கு நான் நன்கு தகவமைத்துக்கொண்டேன்* | 0.8 | 4.8 | 20.7 | 20.4 | 5.8 | 10.1 |
| *வீட்டில் இருந்து வேலை செய்யத் தொடங்கியதில் இருந்து மிகக் கடினமான வேலைகளை எவ்வாறு செய்வது என்பதை நான் அறிந்துகொண்டேன்* | 4.2 | 5.3 | 28.1 | 15.9 | 5.8 | 10.3 |

*உரு 2*

பெற்றுக்கொள்ளும் உதவியின் அளவு வேலைச் செயலாற்றுகையின் அளவில் தாக்கம் செலுத்துகின்றது எனும் எண்ணக்கருவின் காரணமாக அது வீட்டில் இருந்து வேலை செய்வதன் வெற்றிக்கு இன்றியமையாததாகும். ''பெற்றுக்கொண்ட உதவியின்'' கீழ் மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்களுக்கும் ''செயலாற்றுகை மதிப்பீட்டின்'' கீழ் மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்களுக்கும் இடையிலான உறவினை மதிப்பிடுவதற்குத் தொடர்புப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்பானது P பெறுமதியில் 0.01 எனக் கணிசமானதாக இருந்த அதேவேளை, வலுவான சாதகமிக்க அல்லது பாதகமிக்க தொடர்பு கணக்கிடப்படவில்லை. இது பெற்றுக்கொண்ட உதவியின் அளவு வேலைச் செயலாற்றுகையின் அளவுடன் பொருந்தவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றது.


### 3. பெருந்தொற்றின் போது போக்குவரத்து

பெருந்தொற்று ஏற்பட்டதில் இருந்து, போக்குவரத்து என்பது ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. வைரஸ் தொற்றுக்கு உட்படுவதைப் பொதுப் போக்குவரத்து அதிகரித்தது. பங்குபற்றுனர்களில் 37% ஆனோர் பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்துகின்றனர் என்பதும் அதனால் எமது பங்குபற்றுனர்களின் மிகப் பொதுவான போக்குவரத்து முறையாகப் பொதுப் போக்குவரத்து அமைந்திருந்தது என்பதுவும் ஆய்வில் இருந்து தெரியவந்தது. பங்குபற்றுனர்களில் சுமார் 30% ஆனோர் சொந்தமாக வாகனம் வைத்திருந்தனர். மிகப் பொதுவாக அது மோட்டார்சைக்கிளாக அல்லது சைக்கிளாக இருந்தது. 15% இற்கு மேற்பட்டவர்கள் அவர்களின் வேலைத்தளத்திற்கு அருகில் வசித்தததால் அவர்கள் போக்குவரத்து முறையினைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனையோர் அலுவலகப் போக்குவரத்துச் சேவைகளை அல்லது டாக்சிகளை அல்லது முச்சக்கரவண்டிகளைப் பயன்படுத்தினர்.




போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகளை மேலும் ஆராய்வதற்காக டாக்சியினைப் பொதுப் போக்குவரத்து முறையாகப் பயன்படுத்துவோரால் அதன் செலவினைத் தாக்குப்பிடிக்க முடிந்ததா என ஆய்வாளர்கள் விசாரித்தனர். 7.7% ஆனோர் **ஆம்** என்றும் 39.3% ஆனோர் **இல்லை** என்றும் குறிப்பிட்டனர். அதேவேளை இந்த விடயத்தில் தம்மால் எவ்விதமான முடிவினையும் எடுக்க முடியாதுள்ளதாக 25% ஆனோர் குறிப்பிட்டனர்.

**உரு 7: போக்குவரத்துக்கான பொதுவான வழி**




**உரு 8: பெருந்தொற்று ஏற்பட்டது முதல் பயணம் செய்யப் பயம்**

பெருந்தொற்று ஏற்பட்டது முதல் பங்குபற்றுனர்கள் போக்குவரத்துத் தொடர்பாக அனுபவித்த அச்சத்தின் அளவு தொடர்பான கேள்வி கருத்தாய்வில் மிகவும் துருவிக் கேட்கப்பட்ட கேள்வியாக அமைந்திருந்தது. கீழேயுள்ள அட்டவணை காட்டுவது போல், தாம் அதிகரித்த அளவு பயத்தினை உணர்ந்ததாகக் கிட்டத்தட்ட 38% ஆனோர் குறிப்பிட்டனர். அதேவேளை 27% ஆனோர் நடுத்தரமான அளவு அச்சமடைந்ததாகக் குறிப்பிட்டனர். ஆனால் 12.5% ஆன பங்குபற்றுனர்கள் பெருந்தொற்று ஏற்பட்டது முதல் அச்சம் அதிகரிக்கவோ அல்லது குறையவோ இல்லை எனக் குறிப்பிட்டனர்.


**4. சமூக வாழ்வு**

2019 ஆம் ஆண்டில் இருந்து, முழுமுடக்கத்தின் காரணமாகவும் கட்டுப்படுத்தப்பட்ட பயணங்களின் காரணமாகவும் நீட்டிக்கப்பட்ட தொற்றுத்தடைகாப்புக் காரணமாகவும் சமூக வாழ்வு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. கொவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்டது முதல் பல்வேறு சமூகக் குழுக்களுடன் பங்குபற்றுனர்கள் எத்தனை தடவைகள் தொலைபேசி/சமூக ஊடகங்கள் மூலம் தொடர்பாடல் மேற்கொண்டனர் என்பதை ஆய்வாளர்கள் அடையாளம் காண நாடினர்.

கீழேயுள்ளவாறாக அக்கறைக்குரிய குழுக்கள் குறிப்பிடப்பட்டதுடன் நாளாந்த/வாராந்த/மாதாந்த அடிப்படையில் அவர்களின் தொடர்பாடல் பற்றிய தகவல்களும் தொடர்பாடல் ஒரு மாத காலப்பகுதியில் இடம்பெறாதிருந்ததா என்பது பற்றியும் ஆராயப்பட்டது.

1. நெருங்கிய குடும்ப உறுப்பினர்
2. தூரத்துக் குடும்ப உறுப்பினர்
3. நண்பர்
4. அயலவர்
5. சக வகுப்பு மாணவர்
6. ஆசிரியர் / விரிவுரையாளர்
7. தொண்டர் அமைப்பு
8. சமூக வலையமைப்பு

நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள், தூரத்துக் குடும்ப உறுப்பினர்கள், அயலவர்கள், மற்றும் நண்பர்கள் எதிர்பார்த்தவாறு நாளாந்த / வாராந்த அடிப்படையில் தொடர்பாடல் பேணப்பட்ட பிரதான சமூகக் குழுக்களாக இருந்தனர். பெரும்பான்மையானவர்கள் தாம் ஆசிரியர்களுடனும் விரிவுரையாளர்களுடனும் தொடர்பாடலில் இருக்கவில்லை எனக் குறிப்பிட்டனர். நேரடியான வகுப்புக்கள் நிறுத்தப்பட்டமையும் பங்குபற்றுனர்களின் குழுக்கள் எவ்விதமான கல்வி நிறுவனத்தினதும் பங்காக இல்லாமல் இருந்தமையும் இதற்கான காரணங்களாக இருக்க முடியும். அவர்கள் தொண்டர் அமைப்புக்களுடன் தொடர்பாடவில்லை எனவும் குறிப்பிட்டனர்.





**உரு 9: நாளாந்தத் தொடர்பாடல்**




**உரு 10: வாராந்தத் தொடர்பாடல்**




**உரு 11: மாதாந்தத் தொடர்பாடல்**





**உரு 12 தொடர்பாடல் ஒருபோதும் இல்லை**

சமூக இடையீடு என்பது தொடர்புடன் இருப்பதை மட்டும் குறிக்காது. உதவிக்காகவும் அல்லது ஆலோசனைக்காகவும் சமூகத்தினைச் சென்றடைவதையும் இது குறிக்கின்றது. சுகவீனமடைதல், மன உற்சாகம் குன்றுதல், தொழில், கல்வி அல்லது உறவுகள் பற்றிய கரிசனை போன்ற தொடரான புனைகோளான நிலைமைகள் வழங்கப்பட்டு, உதவிக்காகப் பங்குபற்றுனர்கள் அணுகும் சாத்தியமுடைய குழுவினைத் தெரிவுசெய்யுமாறு கூறப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட சகல கூற்றுக்களிலும் பங்குபற்றுனர்கள் உதவிக்காக நாடிய முதல் நபர் குடும்ப உறுப்பினர் என்பது தெளிவாக அடையாளம் காணப்பட்டது. உதவிக்கான இரண்டாவது மிகப் பிரபலமான தெரிவாகச் சகல கூற்றுக்களிலும் நெருங்கிய நண்பர் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் சுகவீனமுற்ற போது இதில் விதிவிலக்குக் காணப்பட்டது. சுகவீனமுற்றபோது பல தெரிவுகள் சுட்டிக் காட்டப்பட்டன. இதில் பல சமூகக் குழுக்களை நாடுவது குறிப்பிடப்பட்டிருந்தது.

சுவாரஸ்யமாக, கொவிட்-19 நெருக்கடிகள் பற்றிப் பங்குபற்றுனர்கள் பேச விரும்பியபோது அவர்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரை அணுகும் அதிக சாத்தியம் காணப்பட்டது. பெரும்பான்மையானோரால் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாவது தெரிவாக ஒன்றில் நெருங்கிய நண்பரை நாடுவது அல்லது யாரையும் நாடாதிருப்பது காணப்பட்டது. இவை இரண்டுமே ஒரே புள்ளியீட்டல்களைக் காட்டின. இந்தத் தெரிவுகளுக்கு அப்பால், கொவிட்-19 நெருக்கடிகள் பற்றிப் பேசவும் அது தொடர்பான பிரச்சினைகள் பற்றிப் பேசவும் பங்குபற்றுனர்கள் சமூக வலையமைப்புக்களையும் அடையாளம் கண்டனர்.

கல்வி மற்றும் எதிர்காலக் கல்வி வாய்ப்புக்கள் மற்றும் இலக்குகள் பற்றிப் பேசக் கிடைத்தபோது, நிர்வாகப் பணியாளர்களுடன் பேசுவது மூன்றாவது மிகப் பிரபலமான தெரிவாகக் காணப்பட்டது. மனதில் உற்சாகம் குன்றும் போது, சுகவீனமடைகையில், தனிப்பட்ட நிதிப் பிரச்சினை தொடர்பான ஆலோசனைகளுக்கு, குடும்பம் மற்றும் உறவுகள் பற்றிய பிரச்சினைகள் என வருகையில், எதிர்காலத் தொழில் திட்டங்கள் தொடர்பில், உணர்வு ரீதியான ஆதரவினைப் பெறுவதற்குப் பங்குபற்றுனர்கள் தம்முடன் வாழ்பவர்களை நாடும் சாத்தியத்தினைக் கொண்டிருந்தனர். பல்வேறு தெரிவுகளைக் கொண்டிருப்பதைப் பங்குபற்றுனர்கள் வெளிப்படுத்தியமை ஒரு பலமாகவும் சாதகமான காரணியாகவும் கருதப்பட்டது. ஏனெனில் இது உறுதியான ஒரு சமூக உதவி முறைமையினைச் சுட்டிக்காட்டியது. ஆயினும், தாம் யாருடனும் பேசாத சந்தர்ப்பங்களும் இருந்ததாகப் பங்குபற்றுனர்கள் குறிப்பிட்டனர். பங்குபற்றுனர்களில் அதிகமானவர்கள் தமது எதிர்காலக் கல்வித் திட்டங்கள் மற்றும் தொழில் இலக்குகள் பற்றிக் கலந்துரையாட எவரையும் நாட மாட்டார்கள் எனக் குறிப்பிட்டனர்.





**உரு 13: சுகவீனத்தில் உதவிக்கான தேவை**

***"நீங்கள் சுகவீனமாகப் படுக்கையில் சில நாட்கள் இருக்க நேரிடுகையில் வீட்டு வேலைகளில் உதவி செய்தல்."***

அதிகமான சந்தர்ப்பங்களில் முதலில் நாடப்பட்டவர்கள் குடும்ப உறுப்பினர்களே (71.6%), இதற்கு அடுத்ததாகப் பங்குபற்றுனர்கள் யாருடன் வாழ்கின்றார்களோ அவர்கள்(9%).

இந்த வினாவிற்கு, பங்குபற்றுனர்களில் 10.3 சதவிகிதமானவர்கள் பல்வேறு தெரிவுகளை வழங்கியிருந்தனர். இது சுகவீனமாக இருக்கையில் உள்ள உறுதியான சமூக உதவி முறைமையினையும் உதவியினை நாடுவதற்கான வெளிப்படைத்தன்மையினையும்


***"நீங்கள் மன உற்சாகம் குன்றியிருக்கின்றீர்கள், உங்கள் நிலையினைப் பற்றி, சுகாதாரத்தினைப் பற்றி அல்லது நிலைமையினைப் பற்றி யாருடனாவது பேச விரும்புகின்றீர்கள்"***





உளவியல் உதவி தேவைப்படுகையில் குடும்ப உறுப்பினர்களும் நெருங்கிய நண்பர்களும் (40.6%; 35%) அணுகுவதற்கான சமூகக் குழுக்களாகக் கருதப்பட்டனர்.

ஆயினும், ஏனைய சமூகக் குழுக்களும் அணுகப்பட்டுள்ளன. இங்கேயும் பங்குபற்றுனர்களில் 4.5 சதவிகிதத்தினரால் பரந்த அடைவிற்கான ஆற்றலைச் சுட்டிக்காட்டி பல்வேறு தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உளவியல் தேவையினைக் கலந்துரையாடுகையில் இவ்வாறான கலந்துரையாடல்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் அதிகளவு வரையறுக்கப்பட்டிருந்தன. மேலும் ஏனையோரை

**''கல்வி (விரிவுரைகள், கருத்தரங்குகள், நடைமுறைப் பணிகள்) தொடர்பான பிரச்சினைகள் பற்றிப் பேச விரும்புகையில்''** மற்றும் **''எதிர்காலக் கல்வி மற்றும் நீண்ட காலக் கல்வி இலக்குகள்''** பற்றிப் பேச விரும்புகையில் என்ற இரண்டு கேள்விகள் தொடர்பான பதிலில், குடும்பம் மற்றும் நண்பர்களை நாடிய பின்னர், பங்குபற்றுனர்கள் பல்கலைக்கழக நிர்வாகப் பணியாட்டொகுதி உறுப்பினர்களை நாடுவதற்கான அதிக சாத்தியத்தினைக் கொ





**உரு 14: கல்விப் பிரச்சினைகள் பற்றி யாருடன் பேசுவது**


**உரு 15: எதிர்காலக் கல்வி மற்றும் இலக்குகள் பற்றி யாருடன் பேசுவது**

**தனிப்பட்ட நிதி நிலைமைகள்** பற்றிப் பேசுவதற்காகப் பங்குபற்றுனர்கள் குடும்ப உறுப்பினர்களை நாடும் சாத்தியத்தினையே அதிகம் கொண்டிருந்தனர் (41.1%). ஆயினும், ஏனைய சமூகக் குழுக்களை நாடும் சாத்தியம், சுவாரஸ்யமாக, 10% இனை விடக் குறைவாகவே காணப்பட்டது. இது தனிப்பட்ட நிதி விடயங்களை நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் அல்லாதோருடன் பேசுவதற்குக் காணப்படும் தயக்கத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது




**உரு 16: தனிப்பட்ட நிதிப் பிரச்சினைகளை யாருடன்**

**பேசுவது**





**உரு 17: எதிர்காலத் தொழில்கள் பற்றி யாருடன் பேசுவது**

**எதிர்காலத் தொழில் வாய்ப்புக்கள்** பற்றிய கரிசணைகள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுடன் பரவலாகப் பகிரப்படுகின்றன. இதுவரையில் அணுகப்பட்ட பொதவான குழுக்களுக்கு அப்பால், பங்குபற்றுனர்களின் தொழில் என வருகையில் அவர்கள் சமூக வலையமைப்புக்களை நாடுவதற்கான சாத்தியம் காணப்பட்டது.


ஏனைய குறித்துரைக்கப்படாத உதவி மூலம் 12.8% ஆகக் காணப்பட்டது.

**குடும்பம் மற்றும் உறவுகள்** பற்றிய கரிசனைகளைக் கலந்துரையாடுவதில் பங்குபற்றுனர்களில் 57% MNdhu; குடும்ப உறுப்பினர்களை நாடுவதாகக் குறிப்பிடப்பட்டது.

நெருங்கிய நண்பர்களுடன் அல்லது தம்முடன் வாழ்பவர்களுடன் 10% இற்கும் குறைவானவர்களே பேச விரும்புவது தங்களுடைய நெருங்கிய குடும்பத்திற்கு வெளியேயுள்ளவர்களை நாடுவதற்குப் பங்குபற்றுனர்கள் விரும்பாமையினைச் சுட்டிக்காட்டுகின்றது.




**உரு 18: குடும்பம் மற்றும் உறவுகள் பற்றி யாருடன் பேசுவது**




**உரு 19: கொவிட் 19 நெருக்கடி பற்றி யாருடன் பேசுவது**


**கொவிட் 19 நெருக்கடி பற்றிப் பேசுவதற்கு**

குடும்ப உறுப்பினர்களை நாடுவதற்கு அப்பால் (25.5%), பங்குபற்றுனர்கள் நெருங்கிய நண்பர்களையும் (8.5%) சமூக வலையமைப்புக்களையும் நாடுகின்றனர் (8.2%).

சுவாரஸ்யமாக, நெருங்கிய நண்பர்களுடன் பேசும் பங்குபற்றுனர்கள் (8.5%) பெருந்தொற்று நிலவரம் பற்றிப் பேச யாரையும் நாடவில்லை.

### 5. உணர்வுபூர்வமான வாழ்க்கை


பெருந்தொற்று பல தனிநபர்களின் உடல் ஆரோக்கியத்திலும் வாழ்வாதாரங்களிலும் சமூக இடையீடுகளிலும் உணர்வு ரீதியான நலனோம்புகையிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய தொடரில் வினாக்களின் தொடர் மூலம் சமூக இடையீடு என்பது உளவியல் ரீதியான நலனோம்புகைக்கு முக்கியமானது என நிலைநாட்ட முயற்சித்தமைக்கு அப்பால், பெருந்தொற்றுப் பற்றிய செய்தி கிடைத்ததில் இருந்து பொதுமக்களின் உணர்வு ரீதியான அனுபவங்களை அடையாளம் காண்பதிலும் பங்குபற்றுனர்களும் ஆய்வாளர்களும் ஆர்வம் கொண்டிருந்தனர். இந்த நோக்கத்திற்காக சாதகமான மற்றும் பாதகமான உணர்வுகளின் தொடரொன்று ஆராயப்பட்டது.




மகிழ்ச்சி, எதிர்பார்ப்பு போன்ற சாதகமான உணர்வுகளை ஆராய்ந்தபோது, தமது பிரதேசத்தில் பெருந்தொற்று ஏற்பட்டது முதல் தமது வேலைகளைச் செய்கையில், தமது நாளுக்கான ஆயத்தங்களைச் செய்கையில் சில நேரங்களில் மாத்திரமே இந்த உணர்வுகளை அனுபவித்ததாகப் பங்குபற்றுனர்களில் அதிகமானவர்கள் குறிப்பிட்டனர்

**உரு 20: சாதகமான உணர்வுகள்**


பாதகமான உணர்வுகளை ஆராய்கையில், பங்குபற்றுனர்களின் மிகப் பொதுவான பதிலாகத் தாம் அதிகமான பதகளிப்பினையும் சில வேளைகளில் கோபத்தினையும் அவநம்பிக்கையினையும் உணர்ந்ததாகக் குறிப்பிட்டமை அமைந்திருந்தது. பங்குபற்றுனர்கள் வெறுப்பின் உயர் மட்டம் பற்றி முறைப்பாடு செய்வில்லை





**உரு 21: பாதகமான உணர்வுகள்**

### 6. வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள்

பங்குபற்றுனர்களுக்குப் பல தொடரான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு தனிப்பட்ட சுகாதாரம், கல்வி, நிதி மற்றும் தொழில்வாய்ப்பு, குடும்ப சுகாதாரம் மற்றும் உறவு போன்ற பரப்புக்களில் தமது தனிப்பட்ட சூழ்நிலை பற்றி எத்தனை தடவைகள் கவலைப்பட்டனர் எனக் கேட்கப்பட்டது. அடையாளம் காணப்பட்ட வாழ்க்கைச் சூழ்நிலைகள் பற்றிச் சிந்திப்பதில் ஈடுபட்டுள்ள அளவு சற்றுக் கவலைப்படுதல் முதல் எப்போதும் கவலலைப்படுதல் வரை தரமிடப்பட்டது.





பங்குபற்றுனர்களில் பெரும்பான்மையானவர்கள் (50% இற்கும் அதிகமாவர்கள்) தாம் தமது தனிப்பட்ட ஆரோக்கியம் மற்றும் மனநல ஆரோக்கியம் பற்றிச் சிலவேளைகளில் மட்டுமே சிந்தித்ததாகக் குறிப்பிட்டனர். 10% இற்கும் குறைவான பங்குபற்றுனர்களே தாம் தமது தனிப்பட்ட உடல் நலம் பற்றியும் மனநல ஆரோக்கியம் பற்றியும் எப்போதும் கவலைப்பட்டதாகக்




**உரு 22: கல்விப் பணி பற்றிய கவலை**

கல்விப் பணி, படிப்பு மற்றும் எதிர்காலக் கல்வி பற்றிய கரிசணைகளில் (சுமார் 25%), பங்குபற்றுனர்கள் சொற்பமான நேரத்தினையே செலவழித்தனர்





**உரு 23: குடும்பக் கவலை**

பங்குபற்றுனர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களின் குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியம் பற்றியும் உறவுகள் பற்றியும் எல்லா நேரங்களிலும் கவலைப்பட்டனர். குடும்பம் பற்றிச் சொற்ப நேரமும் குடும்பத்தின் ஆரோக்கியம் பற்றி அதிக நேரமும் கவலைப்படுவதாக இரண்டாவது அதிகமான பதில்கள் பெறப்பட்டன.


தனிப்பட்ட நிதிகள் பற்றிய மற்றும் எதிர்காலத் தொழில்வாய்ப்புக்கள் பற்றிய கவலைகள் பங்குபற்றுனர்களின் வாழ்வின் சகல சந்தர்ப்பங்களிலும் காணப்பட்டன.

தொழில் வாய்ப்புக்களைப் பொறுத்த அளவில் கவலையானது சில நேரங்களில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டமை இரண்டாவது மிகவும் பிரபல பதிலாக இருந்தது. தனிப்பட்ட நிதிகள் பற்றிய கவலை பங்குபற்றுனர்களுக்கு அடிக்கடி இருந்தது




**உரு 24: தனிப்பட்ட நிதி மற்றும் தொழில் பற்றிய கவலை**


தனி




**உரு 25: பெருந்தொற்றுப் பற்றிய கவலை**

கொவிட்-19 வைரஸ் பற்றிய கவலை தொடர்பாக அல்லது ஏனைய எதிர்காலப் பெருந்தொற்றுக்களின் சாத்தியம் பற்றிய கவலை தொடர்பாகப் பங்குபற்றுனர்களிடம் இருந்து ஒரே பதில் கிடைத்தது. எல்லா நேரங்களிலும் கவலைப்படுதல் என்பதே பங்குபற்றுனர்களின் மத்தியில் இருந்து பொதுவாகத் தெரிவுசெய்யப்பட்ட பதிலாகக் காணப்பட்டது.

பெருந்தொற்றினைத் தொடர்ந்து, பங்குபற்றுனர்கள் அவர்களின் ஓய்வுநேரச் செயற்பாடுகள், விளையாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகள் பற்றியும் ஏனைய சமூக வாழ்க்கை அம்சங்கள் பற்றியும் ஓரளவு கவலையடைந்தனர் அல்லது இந்தக் கரிசனைகள் தமது வாழ்வின் பிரதான அம்சங்கள் இல்லை என்பதாக நடந்துகொண்டனர்




**உரு 26: ஓய்வுநேரச் செயற்பாடுகள் தொடர்பான கவலை**


## 7. நிதி நிலைமைகள்

### a. பொதுவானவை

கொவிட்-19 பெருந்தொற்று ஒரு சுகாதாரப் பிரச்சினையாக மாத்திரம் மாறாமல் பொருளாதார நெருக்கடியாகவும் மாறி உலகளாவிய ரீதியில் கணிசமான பின்னடைவுகளை ஏற்படுத்தி, பொருளாதார ரீதியாக வலுவான நாடுகளில் கூட பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. கணிசமான மட்டத்திலான வருமானத்தினைப் பெறுவதற்காகச் சுற்றுலாத்துறை போன்ற தொழிற்துறைகளில் தங்கியுள்ள வளர்முக நாடு என்ற ரீதியில் இலங்கையும் பெருந்தொற்றின் பொருளாதாரத் தாக்கத்திற்கு உடனடியாக உட்பட்டது. பெருந்தொற்று ஏற்பட்ட உடனேயே நிறுத்தப்பட்ட ஒரு பிரதான துறையாகச் சுற்றுலாத்துறை அமைந்திருந்தது.

பங்குபற்றுனர்களிடம் அவர்களின் அறிவினை அடிப்படையாகக் கொண்டு, கொவிட்-19 பெருந்தொற்றுக்கு முன்னரான அவர்களின் குடும்பத்தின் மாதாந்த மொத்த செலவழிக்கத்தக்க வருமானத்தினைக் கருத்தில் கொண்டு அதனைக் கொவிட்-19 பெருந்தொற்றுக்குப் பின்னரான வருமானத்துடன் ஒப்பிட்டு அவர்களின் குடும்பத்தின் ஒட்டுமொத்தச் செலவினை எந்த அளவு சமாளிக்கக்கூடியதாக இருந்தது எனத் தீர்மானிக்குமாறு கோரப்பட்டது.


பெருந்தொற்றுக்கு முன்னர் பங்குபற்றுனர்களில் 33.7% MNdhu; அவர்களின் குடும்பச் செலவினை மிகவும் இலகுவாகச் சமாளித்ததாகக் குறிப்பிட்டனர். ஆயினும், கொவிட்-19 பெருந்தொற்றுக்குப் பின்னர் 35.3% ஆன பங்குபற்றுனர்கள் இதனை மிகுந்த கஷ்டத்துடன் மேற்கொண்டதாகக் குறிப்பிட்டனர்.




**உரு 28: செலவழிக்கத்தக்க வருமானம்**

### b. கடன்கள்

இக்காலப்பகுதியில் பங்குபற்றுனர்களில் யாராவது ஏதாவது கடன்களைப் பெற்றுள்ளனரா எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, 46.9% "ஆம்" எனவும் 43.8% ஆனோர் "இல்லை" எனவும் குறிப்பிட்டனர். ஏனையோர் கேள்விக்கு பதிலளிக்கவில்லை. கடன் பெற்றதாக உறுதிப்படுத்தியவர்களின் மத்தியில், கடன் பெற்றமைக்கான பல்வேறு காரணங்கள் வழங்கப்பட்டன.





உரு 29: கடன் நோக்கம்

ஆதிகமான பங்குபற்றுனர்கள் (சுமார் 70%) கடன் பெற்றமைக்கான மிகப் பிரதான காரணங்களாக முதலில் வாழ்க்கைச் செலவினைச் சமாளிப்பதும் அடுத்ததாக மருத்துவச் செலவுகளைச் சமாளிப்பதும் இருந்ததெனக் குறிப்பிட்டனர்(12.7%).

ஏனைய காரணங்களுள் வாடகை செலுத்தல் மற்றும் பாடசாலைக் கட்டணம் அடங்கியிருந்தது.

பங்குபற்றுனர்களில் 5.7%ஆனோர் பல்வேறு காரணங்களுக்காகக் கடன் பெறப்பட்டதாகக் குறிப்பிட்டனர்.




உரு 30: கடன் வழங்கியோர்


வங்கியே தமது கடன்களுக்கான பிரதான மூலமாக இருந்ததாகப் பங்குபற்றுனர்கள் தெரிவித்தனர் (23.8%). வங்கிக்கு அடுத்ததாக நண்பர்களும் (17%) சுயாதீனமான கடன் வழங்குனர்களும் மூலங்களாகக் குறிப்பிடப்பட்டன (15.4%).

குடும்ப உறுப்பினர் ஒருவரிடம் இருந்து கடன் பெறுவதும் நுண்நிதிக் கம்பனிகளிடம் இருந்து கடன் பெறுவதும் ஒரே அளவாகக் காணப்பட்டன 12.2%.

ஆயினும், பல்வேறு இடங்களில் இருந்து கடன் பெற்றுள்ளதாக 18.6% ஆன நேரங்களில் பங்குபற்றுனர்கள் குறிப்பிட்டனர். “சமுர்த்தியில்” இருந்து கடன் பெறுவது பற்றிச்


### c. கல்விச் செலவுகள்

இணையவழியில் வகுப்புக்களை நடத்துவதற்கும் பங்குபற்றுவதற்கும் தேவைப்படும் வளங்களை அதிகரித்ததன் மூலமும் சமூக இடைவெளியினைப் பேணுவதற்காக நேரடியான வகுப்புக்களை நடத்துவதற்காக மேலதிக வளங்களைத் தேவைப்படுத்தியதன் மூலமும் பெருந்தொற்றுக் கல்வித் துறையில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்த மேலதிக, எதிர்பாராச் செலவுகளைக் கல்வி கற்பிப்போரும் மாணவர்களின் பெற்றோருமே தாங்கிக்கொள்ள நேரிட்டது. எனவே, பெருந்தொற்றின்போது பங்குபற்றுனர்களின் பிள்ளைகளின் கல்விச் செலவுகளின் நிலை தொடர்பாகப் பாடசாலைக் கட்டணங்களும் தனியார் வகுப்புக் கட்டணங்களும் வினாக்கொத்தில் உள்ளடங்கியிருந்தன. மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் பாடசாலைக் கட்டணங்கள் மாறாதிருந்தது அவதானிக்கப்பட்டது.




**உரு 31: பாடசாலைக் கட்டணம்**

பெருந்தொற்றுக் காலப்பகுதியில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த போதிலும் பாடசாலைக் கட்டணங்களும் தனியார் வகுப்புக் கட்டணங்களும் மாறாதிருந்ததைச் சிலர் அவதானித்துள்ளனர். ஆயினும், கட்டணங்களை அதிகரித்தல், தனியார் வகுப்புக் கட்டணங்களைக் குறைத்தல், அகற்றல் மற்றும் கொடுப்பனவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தல் போன்ற பல்வேறு பதிற்செயற்பாடுகள் தனியார் வகுப்புக்களினால் மேற்கொள்ளப்பட்டன. பதிலளித்தவர்களில் சிலர் "ஏனையவை" எனும் தெரிவினைத் தெரிவுசெய்திருந்தனர். இதற்கான விளக்கம் பெருந்தொற்றின்போது அவர்களுக்கு தனியார்





**உரு 32: தனியார் வகுப்புக் கட்டணம்**

## d. அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கான ஆற்றல்

பெருந்தொற்று ஏற்பட்டது முதல் உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசியமான பொருட்களை வாங்குவதற்கான ஆற்றல் ஆராயப்பட்டு மருந்து வாங்கப் பணம் கிடைப்பதற்கு முன்னர் மருந்துகள் முடிந்துவிடும் எனப் பங்குபற்றுனர்கள் **பெரும்பாலும்** கவலைப்பட்டமை அடையாளம் காணப்பட்டது. பணம் கிடைப்பதற்கு முன்னர் உணவுப் பொருட்கள் தீர்ந்துவிடும் என்ற கவலை மிகக் குறைவான அளவே காணப்பட்டது.

வாங்கிய உணவுப் பொருட்களும் மருந்துகளும் முடிவடைகின்றமையும் அவற்றினை வாங்க முடியாமல் இருப்பதும் கரிசனைக்குரிய விடயங்களாக இருந்தன.




**உரு 33: உணவும் மருந்துகளும் வாங்குவதற்கான ஆற்றல் பற்றிய கவலை**

## 8. உதவிக்கான அணுகல்

சமுதாயத்தினர் பெருந்தொற்றின் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு உதவுவதற்காக அரசாங்க நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தனியார் துறை நிறுவனங்களும் உதவிக்கு வந்தன. உதாரணமாக, தொழில்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவை நிதியுதவி வழங்கின, மாணவர்களுக்குக் கல்வி உதவியினை வழங்கின மற்றும்/அல்லது வீடுகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கின.

இந்த ஒவ்வொரு துறையிலும் இருந்தும் உதவியினைப் பெறுவதற்கான தங்களின் அணுகலை ஒப்பிடுவதற்குப் பங்குபற்றுனர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

பெரும்பான்மையானவர்கள் தமக்கு அரசாங்கத்திடமோ, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தோ, தனியார் துறையில் இருந்தோ வெவ்வேறாகவோ அல்லது சேர்த்தோ உதவியினைப் பெறுவதற்கான அணுகல் இல்லாதிருந்தது எனக் குறிப்பிட்ட அதேவேளை, உதவி கிடைத்ததாகக் குறிப்பிட்டவர்கள், மிகப் பொதுவான உதவி அரசாங்கத் துறையில் இருந்து கிடைத்ததாகவும் (35%) அதனைத் தொடர்ந்து அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து கிடைத்ததாகவும் (22.8%) தனியார் துறையிடம் இருந்து கிடைத்ததாகவும் (22%) குறிப்பிட்டனர். பல் துறைகளின் உதவிக்கான அணுகல் பதிலளித்தவர்களில் 29.4% இனால் பெற்றுக்கொள்ளப்பட்டன.




**உரு 34: உதவிக்கான அணுகல்**

### 9. கொவிட்-19 விழிப்புணர்வும் அறிவும்

கொவிட்-19 பெருந்தொற்றுப் பற்றிப் பங்குபற்றுனர்கள் கொண்டிருந்த விழிப்புணர்வினதும் அறிவினதும் மட்டத்தினை அடையாளம் காண்பதும் இது பொது/சமுதாய மட்டத்தில் எந்த அளவு வெற்றிகரமானதாக இருந்தது என்பதை அடையாளம் காண்பதும் ஆய்வாளர்களுக்கு முக்கியமானதாக இருந்தது.


பங்குபற்றுனர்களிடம் அவர்களின் குடும்பத்தினருக்குக் கொவிட்-19 பற்றிய ஏதாவது விழிப்புணர்வு வழங்கப்பட்டதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, 68.2% ஆனோர் ஆம் என பதிலளித்தனர். தமக்கு அவ்வாறான விழிப்புணர்வு வழங்கப்படவில்லை என 20.7% ஆனோர் குறிப்பிட்டனர்.

மேலும், கொவிட்-19 தொடர்பாகச் சமுதாயத்தினால் அமுல்படுத்தப்பட்ட தடுப்பு நடவடிக்ககைகள் இருந்தனவா எனப் பங்குபற்றுனர்களிடம் கேட்கப்பட்டதற்கு, பதிலளித்தவர்களில் 62.1% ஆனோர் அவ்வாறான நடவடிக்கைகள் இருந்தன எனக் கூறிய அதேவேளை 22% ஆனோர் 'இல்லை' எனக் குறிப்பிட்டனர்.

இரண்டு வினாக்களுக்கும் பெரும்பான்மையானவர்கள் ஆம் என பதிலளித்த போதிலும், இல்லை என பதிலளித்தவர்கள் 20 சதவிகிதமாக இருப்பதால் சூழ்நிலையின் பாரதூரத்தினைக் கருத்திற்கொண்டு அதனைப் பாரிய கரிசனைக்குரியதாகக் கருதவேண்டும்.

### 10. உதவி நடவடிக்கைகளும் நடத்தையும்

பெருந்தொற்று ஏற்பட்டதில் இருந்து, எம்மில் பலரின் நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு கொவிட்-19 இற்கு எதிரான வழிகாட்டல்களை நாம் பின்பற்றத் தொடங்கிய காரணத்தினால் புதிய நடைமுறைகளும் உதவி நடவடிக்கைகளும் எமது நாளாந்த வாழ்க்கை ஒழுங்கினுள் கூட்டிணைக்கப்பட்டு எமது முன்னைய நடைமுறைகள் சில மாற்றப்பட்டன. பங்குபற்றுனர்களின் நடத்தைகள்/பழக்கங்கள் பற்றியும் கொவிட் பெருந்தொற்றிற்கு முன்னரும் பின்னரும் அவர்களின் நடைமுறைகள் மற்றும் நடத்தைகள் / பழக்கங்கள் ஆகியவற்றை ஒப்பிட்டு அவர்களின் ஈடுபாட்டின் அளவை மதிப்பிடுமாறும் (எப்போதும் இல்லை என்பதிலிருந்து எப்போதும் என்பது வரை) பங்குபற்றுனர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.





உரு 35: கைகளைக் கழுவுதல்

வைரசுக்கு எதிரான பாதுகாப்பில் முக்கியமான நடைமுறையான கைகளைக் கழுவுதலில் கொவிட் நிலைமைக்குப் பின்னர் துரித அதிகரிப்பு ஏற்பட்டது. பங்குபற்றுனர்கள் தாம் 60% ஆன நேரம் கைகளைக் கழுவியதாகக் குறிப்பிட்டனர்.

முன்பு சில வேளைகள் மாத்திரமே கழுவும் சாத்தியம் காணப்பட்டது


எமது வாழ்வின் நாளாந்த அம்சமாக முகக்கவசத்தினை அணிவது பலருக்கும் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பழக்கமாகும். பெருந்தொற்று ஏற்பட்டதிலிருந்து பங்குபற்றுனர்களில் கிட்டத்தட்ட 60% ஆனோர் எப்போதும் முகக்கவசம் அணிந்திருந்தனர். இப்பழக்கம் கொவிட் நிலைமைக்கு




வெளியில் செல்கை
அணி

உரு 36: வெளியில் செல்கையில் முகக்கவசம் அணிதல்


அவசியமின்றி வீட்டை விட்டு வெளியேறல்




**உரு 37: அவசியமின்றி வீட்டை விட்டு வெளியேறல்**


தேவையற்ற காரணங்களுக்காக வீட்டினை விட்டு வெளியேறுவது பெருந்தொற்று ஏற்பட்டதில் இருந்து மட்டுப்படுத்தப்பட்டதுடன் தாம் அவ்வாறு செல்லவில்லை எனப் பெரும்பான்மையானோர் குறிப்பிட்டனர். ஆயினும், பெருந்தொற்றுக்கு முன்னர் தாம் அவசியமற்ற காரணங்களுக்காகச் சிலவேளைகளில் வீட்டை விட்டு வெளியேறியதாகப் பங்குபற்றுனர்கள் குறிப்பிட்டனர்

கொவிட்-19 ஒரு சமூகத் தொற்றாகும். இதனால் பாரிய சனத்திரளையும் சனநெரிசலையும் தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது. பெருந்தொற்றில் இருந்து இந்த நடத்தை அதிகமான பங்குபற்றுனர்களின் வாழ்வில் இடம்பெற்றுள்ளது. ஆனால் பெருந்தொற்றுக்கு முன்னர், சில வேளைகளில், அவர்கள்





சனநெரிசலையும் சனத்த

**உரு 38: சனநெரிசலையும் சனத்திரளையும் தவிர்த்தல்**




**உரு 39: முகத்தினைத் தொடுவதைத் தவிர்த்தல்**


ஒருவர் தனது கைகளை நன்கு கழுவி முகக்கவசத்தினை அணிவதைத் தவிர, வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு முகத்தினைத் தொடாமல் இருப்பதும் முக்கியமானதாகும். பெரும்பான்மையான பங்குபற்றுனர்கள் இது பற்றிய பிரக்ஞையுடன் முகத்தினைத் தொடாமல் இருந்துள்ளனர். பெருந்தொற்றுக்கு முன்னர் இது அரிதான பழக்கமாக இருந்திருக்கின்றது.




கைகளைக் குலுக்குதல் பெரிதும் ஊக்குவிக்கப்படாத ஒன்றாக ஆக்கப்பட்டு வைரஸ் தொற்றுக்கு உட்படுவதைத் தடுப்பதற்காக 'முழங்கைகளை உரசிக்கொள்ளல்' எனும் புதிய சமூக நியமம் அறிமுகப்படுத்தப்பட்டது. கணிசமானோர் தாம் பெருந்தொற்றின் பின்னர் கைகளைக் குலுக்கவில்லை எனக் குறிப்பிட்டனர்.


**உரு 40: கைகளைக் குலுக்குதல்**

நீடித்த முழுமுடக்கத்தின் காரணமாக அதிகமான மக்கள் மருந்துப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் பெருந்தொற்றின் போது வாங்கி இருப்பில் வைத்தனர். பெருந்தொற்றுக்கு முன்னர் இவ்வாறு களஞ்சியப்படுத்துவது அரிதான ஒன்றாகக் காணப்பட்டது





மருந்தகங்களிலும் சில்ல
அத்தியாவசியப் பொருட்கை

**உரு 41: அத்தியாவசியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல்**




**உரு 42: தொடர்பாடலைப் பேணல்**

பிரபலமான சமூகக் குழுக்களுடன் தொடர்பாடலில் இருப்பதற்காகத் திட்டமிடல் - இந்த வினா கலப்புப் பதில்களை வழங்கியது. பெருந்தொற்றுக்கு முன்னர் இவ்வாறு சில வேளைகளில் மட்டுமே செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. ஆயினும், தொடர்பாடலை நடத்த விரும்பிய பங்குபற்றுனர்களின் மத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றம் காணப்பட்டது. பெருந்தொற்றின் பின்னர், இந்தக் குழுவின் இடையீடுகள் 5% இற்கும் குறைவாக இருந்த நிலையில் இருந்து சுமார் 10% ஆக அதிகரித்தது.




**உரு 43: வீட்டில் இருந்து வேலை செய்தல்**


பெருந்தொற்று ஏற்பட்டதும், வீட்டில் இருந்து வேலை செய்தல் ஒரு வழமையாக மாறியது. ஆனால் பலருக்கும் இது ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது. பெரும்பான்மையானவர்கள் (30% இற்கும் மேற்பட்டவர்கள்) தமது தொழிற்துறையின் அடிப்படையில் இன்னும் தொடர்ந்து செயற்படுகின்றனர். ஆயினும், இவ்வாறான நடைமுறைகள் ஒருபோதுமே பங்குபற்றுனர்களின் வாழ்வின் அம்சமாக இருக்கவில்லை அல்லது

பலரும் தங்களின் பயணத் திட்டங்களைப் பெருந்தொற்றின் பின்னர் இரத்துச்செய்தனர். இவ்வாறான நடைமுறைகள் முன்பும் அடிக்கடி அவதானிக்கப்பட்டன. இதற்கான காரணம் பாரிய சனத்திரளைத் தவிர்ப்பதும் பொதுப் போக்குவரத்தினைத் தவிர்ப்பதும் குடும்ப விஜயங்களைத் தவிர்ப்பதுமாகும்.





இ

**உரு 4**
**பயணங்**




வைரஸ் தொற்றுக்கு உட்படலாம் என்ற சாத்தியம் காரணமாகப் பெரும் சனத்திரளைத் தவிர்த்தது போலவே, பொதுப் போக்குவரத்தும் கணிசமான அளவு பங்குபற்றுனர்களினால் எப்போதும் தவிர்க்கப்பட்டன (கிட்டத்தட்ட 40%). வித்தியாசமான போக்குவரத்து முறைக்கு மாறும் சாத்தியம் அல்லது வீட்டில் இருந்து வேலை செய்யும் நடைமுறை என்பது முன்பு ஒரு விடயமாக இருக்கவில்லை.


**உரு 45: பொதுப் போக்குவரத்தினைத் தவிர்த்தல்**




**உரு 46: மக்களுக்கு உதவுதல்**


மக்களுக்கு உதவுதல் போன்ற சமூக நடத்தைகள் பெருந்தொற்று ஏற்பட்டது முதல் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. சமூக உதவியும் சமுதாய ஒன்றிப்பும் பெருந்தொற்றின் ஆரம்பக் கட்டத்தில் அதற்கு முகங்கொடுத்தமையின் இன்றியமையாத பாகமாக இருந்தன

இணைய வழியில் பொருட்களைக் கொள்வனவு செய்தல் பொதுவான நடைமுறையாக இருக்கவில்லை. இது பெருந்தொற்றின் பின்னர் சற்று அதிகரித்தது. ஆயினும், அவ்வாறான வளங்கள் கிடைப்பதையும் தொழில்நுட்ப ஆற்றலையும் கருத்தில் கொள்கையில் பலரும் நேரில் சென்று பொருட்கள் வாங்குவதையே இன்னும் விரும்பினர்.





இணையவழியில் பலச
கொள்வன

**உரு 47: இணைய வழியில் பொருட்கள் வாங்குதல்**




**உரு 48: ஓய்வுநேரப் பொழுதுபோக்கு மற்றும் உடற்பயிற்சி**

ஓய்வுநேரப் பொழுதுபோக்குகள் அல்லது உடற்பயிற்சி செய்தல் போன்றவை பெருந்தொற்று ஏற்பட்டது முதல் அதிகரித்துள்ளன. இது முன்பு அரிதான நடைமுறையாக இருந்தது. நீண்டகால முழுஅடைப்பும் வீட்டில் நீண்ட காலம் முடங்கியிருந்தமையும் இந்த மாற்றத்திற்கான காரணமாக அமையலாம். ஏனெனில், இதன்போது பங்குபற்றுனர்களுக்கு இச்செயற்பாடுகளில்




**உரு 49: குடும்ப உறவினர்களை அல்லது நண்பர்களைப் பார்க்கச் செல்லல்**

ஈ( குடும்ப உறுப்பினர்களை அல்லது நண்பர்களைப் பார்க்கச் செல்லுதல் வாழ்வில் சில நேரங்களில் அடிக்கடி இடம்பெறுவதுண்டு. பெருந்தொற்றினால் இது அரிதான நிகழ்வாக மாறியது. முழுமுடக்கமும் தொற்றுத்தடைகாப்பும் சமூக இடைவெளி பேணலும் இதற்கான காரணங்களாக இருக்கமுடியும்.

**11. கொவிட்-19 தொற்றும் தடுப்பூசியேற்றலும்**


வைரசின் பரவலினால் கொவிட் தொற்றுக்கு ஆளானமை பற்றியும் வைரசைத் தடுப்பதற்கான தடுப்பூசியேற்றல் பற்றியும் பங்குபற்றுனர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

பங்குபற்றுனர்களில் 8.8% ஆனோர் தாம் கொவிட் தொற்றுக்கு ஆளானதாகவும் 67.9% ஆனோர் தாம் தொற்றுக்கு ஆளாகவில்லை என்றும் குறிப்பிட்டனர். இருப்பினும் பங்குபற்றுனர்களில் கணிசமானோர் (15.6%) தமக்குத் தொற்று ஏற்பட்டதா அல்லது இல்லையா என்பது தெரியாது எனக் குறிப்பிட்டனர்.

கட்டணமின்றிய பிசிஆர் பரிசோதனைகளுக்கு நீண்ட வரிசையில் காத்திருக்க நேரிட்டது. கட்டணம் செலுத்தி மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளை அனைவராலும் செய்துகொள்ள முடியவில்லை. எனவே, நோய்க்குறிகள் இருந்த போதிலும் சகல பங்குபற்றுனர்களும் பரிசோதனை செய்வதற்கான ஆர்வத்தினைக் கொண்டிருந்தனர் என்றும் பரிசோதனை செய்திருப்பர் என்றும் கூற முடியாது.

கொவிட்-19 ஒரு சமூகத் தொற்று என்ற காரணத்தினால் தொற்று ஏற்பட்டது உறுதியானதும் அல்லது தொற்றுள்ளோருடன் இருக்க நேரிட்டமை உறுதியானதும் தொற்றுத்தடைகாப்பில் இருப்பது தேவைப்படுத்தப்பட்டது. பங்குபற்றுனர்களிடம் அவர்கள் கொவிட் நோயாளிகளுடன் தொடர்பில் இருந்தனரா எனக் கேட்கப்பட்டது. பங்குபற்றுனர்களில் 12.2% ஆனோர் ஆம் என பதிலளித்தனர். ஆனால் 61.8% ஆனோர் இல்லை என பதிலளித்தனர். பங்குபற்றுனர்களில் 17.5% ஆனோர் அவர்கள் தொற்றுள்ளவர்களுடன் இருந்தனரா என்பது பற்றி நிச்சயமாகத் தெரியாமல் இருந்தனர்.


பங்குபற்றுனர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களில் யாருக்காவது தொற்று ஏற்பட்டதா எனக் கேட்டபோது, 18.6% ஆனோர் ஆம் எனவும் 72.4% ஆனோர் இல்லை எனவும் குறிப்பிட்டனர். மேலும் பங்குபற்றுனர்களில் 0.3% ஆனோர் அவ்வாறான சூழ்நிலை பற்றித் தாம் அறியாதிருந்ததாகக் குறிப்பிட்டனர்.




**உரு 50:** **கொவிட் 19 இற்கு உட்படல்**

வைரஸ் தொற்றுள்ளோருடன் இருத்தல் அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினருக்குத் தொற்று ஏற்படல் அல்லது வைரஸ் தொற்று ஏற்பட்ட ஒருவருடன் இருத்தலுக்கான சாத்தியம் ஆகியவை மனப் பாதிப்பினை ஏற்படுத்தும் செய்திகளாகும். இவற்றினைக் கருத்தில் கொண்டு இச்செய்தி தொடர்பான அல்லது மேற்குறிப்பிட்ட அனுபவம் தொடர்பான அவர்களின் உடனடியான எதிர்வினைகள் பற்றிப் பங்குபற்றுனர்களிடம் கேட்கப்பட்டது.

**செய்திகள் / அனுபவங்களுக்கான எதிர்வினைகள்**





**உரு 51:** **செய்திகள் / அனுபவங்களுக்கான எதிர்வினைகள்**


பங்குபற்றுனர்களில் பெரும்பான்மையானவர்கள் (22%) கரிசனை கொண்டிருந்தனர். ஆயினும், செய்திக்கோ அல்லது அனுபவத்திற்கோ இதே சதவிகிதத்தினர் தாம் எதிர்வினையாற்றவில்லை எனக் குறிப்பிட்டனர்(21.8). அச்சமும் (15.4%) பதற்றமும் (14.3%) பொதுவாக அடையாளம் காணப்பட்ட பதில்களாக இருந்தன (அதேவேளை 7.2% இது பற்றிக் கரிசனை கொள்ளவுமில்லை அல்லது எதிர்வினையாற்றவுமில்லை).

வைரஸ் தொற்றின் வேகத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட பொதுச் சுகாதார நடவடிக்கைகள் நோய்த் தொற்றுக்கான அச்சுறுத்தல் அடையாளம் காணப்பட்டதில் இருந்து இருந்து வருகின்றன. இவற்றுள் மக்களிடம் கைகளைக் கழுவுமாறும் முகக்கவசத்தினை அணியுமாறும் கோரும் சில குறிப்பிட்ட பழக்கங்களை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் உள்ளடங்குகின்றன. பெருந்தொற்றின் முதல் வருடத்திலேயே ஆராய்ச்சியாளர்கள் தடுப்பூசியினை அறிமுகப்படுத்தினர். இது பெருந்தொற்றுக்கு எதிரான செயற்திறன்மிக்க கருவியாகக் கருதப்பட்டது. பழக்கம் சார்ந்த வழிகாட்டல்களைப் பின்பற்றியமை வைரஸ் தொற்றுக்கான சாத்தியத்தினைக் குறைத்த அதேவேளை, தடுப்பூசியேற்றுதல் வைரஸ் தொற்றிய பின்னர் கடுமையாக நோய்வாய்ப்படலை அல்லது இறப்பினைத் தடுப்பதற்கான ஒரு கருவியாகக் காணப்பட்டது.

பங்குபற்றுனர்களிடம் கேட்கப்பட்டது: நடப்பு நிலவரத்தினைக் கருத்தில் கொள்கையில், தடுப்பூசி வழங்கப்பட்டால், அதை எடுப்பீர்களா? தடுப்பூசியினை எடுப்பதாக 27.9% குறிப்பிட்டனர். எடுக்கப்போவதில்லை என 15.1% ஆனோர் குறிப்பிட்டனர். சில பங்குபற்றுனர்கள் தடுப்பூசியேற்றுவது பற்றி நிச்சயமற்றவர்களாக இருந்தனர். எடுக்கலாம் என 15.4% ஆனோர் குறிப்பிட்டனர். 17% ஆனோர் இல்லை எனக் குறிப்பிட்டனர்.


தமக்கு விரைவில் தடுப்பூசியேற்றப்படும் என்பது பற்றிப் பங்குபற்றுனர்கள் எவ்வளவு நிச்சயமாக உள்ளனர் எனக் கேட்கப்பட்டபோது, பெரும்பான்மையானவர்கள் (40.8%) தாம் நம்பிக்கையுடன் இருப்பதாகக் குறிப்பிட்டனர் 12.7% ஆனோர் அதில் நம்பிக்கையில்லை எனத் தெரிவித்தனர். சில பங்குபற்றுனர்கள் நிச்சயமற்றவர்களாக இருந்தனர். ஏனைய 12.7% இருக்கலாம் எனக் குறிப்பிட்டனர். 9.8% ஆனோர் தடுப்பூசியேற்றப்படல் பற்றி எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டனர்.




**உரு 52: தடுப்பூசியேற்றல் நிலை**

2021 மார்ச் 07 ஆம் திகதி இலங்கை அதன் முதலாவது தொகுதித் தடுப்பூசியினை கொவக்சிடம் இருந்து பெற்றுக்கொண்டது. சுமார் ஒரு வருடத்தின் பின்னர் 64.5% ஆனோருக்குத் தடுப்பூசியேற்றப்பட்டுள்ளது.




**உரு 53: கொரோனா வைரஸ் (கொவிட்-19) தடுப்பூசியேற்றல், 2021**

## 12. பொதுவான கருத்துக்கள்

பெருந்தொற்றின் பின்னர் அதன் விளைவுகளில் இருந்து மீளுவது தொடர்பில் பங்குபற்றுனர்கள் எவ்வளவு நம்பிக்கை உடையவர்களாக உள்ளனர் எனப் அவர்கள் அனைவரிடமும் கேட்கப்பட்டது. பங்குபற்றுனர்களில் பலர் பெருந்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட தடைகளில் இருந்து நிதி ரீதியாக மீளுவது தொடர்பில் நடுநிலையான மனநிலை கொண்டிருந்தனர். ஏனெனில் நிதி நிலைமை இன்னும் நிச்சயமற்ற ஒரு சூழ்நிலையிலேயே காணப்படுகின்றது. ஆயினும், நிதி நிலைமைக்கு எதிரான நம்பிக்கை தொடர்பிலும் பெரும்பான்மை வாக்கு இருந்தது. இதேபோன்ற கருத்துக்கள் தொழில்கள் தொடர்பாகவும் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பாகவும் பகிரப்பட்டன. ஆயினும், உறவுகள் தொடர்பாக வருகையில் பெரும்பான்மையானவர்கள் நடுநிலை வகித்தனர். தமது உறவுகள் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பெரும்பான்மையானவர்கள் நம்பினர் என்பதுடன் பெருந்தொற்றின் பின்னர் உறவு மீளல் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

பெருந்தொற்றுப் பற்றிய தமது பொதுவான இறுதிக் கருத்துக்களைப் பகிருமாறு பங்குபற்றுனர்களிடம் கேட்கப்பட்டது. 120 பங்குபற்றுனர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட பண்புசார்ந்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் சில பொதுவான தொனிப்பொருட்கள் அடையாளம் காணப்பட்டதுடன் அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

பெருந்தொற்றினை வெற்றிகொள்வதற்கு வழிகாட்டலைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தினைப் பங்குபற்றுனர்கள் அறிந்துகொண்டனர் மேலும் அது தங்களின் பொறுப்பு என்பதையும் புரிந்துகொண்டனர். வழிகாட்டல்களைப் பின்பற்றாதவர்கள் சுயநலவாதிகள் எனச் சில பங்குபற்றுனர்கள் தெரிவித்தனர்.

உலகில் தற்போது காணப்படும் நிலைமை வாழ்க்கை பற்றிய நிச்சயமின்மையினை உருவாக்கியுள்ளதாகப் பலரும் அவதானித்துள்ளனர். இது சுகாதாரத் துறையினை மாத்திரம் பாதிக்காமல் தொழில்களையும் கல்வியினையும் சமூக வாழ்வினையும் பாதித்துள்ளது. நாம் கொவிட்-19 வைரசினை வேறு நோய்களைப் போன்று ஏற்றுக்கொண்டு அதனுடன் வாழ்வதற்குப் பழகவேண்டும் எனச் சிலர் குறிப்பிட்டனர்.

தங்களின் முழுத் தொழில் வாழ்வும் இலக்குகளும் சின்னாபின்னமாகியுள்ளதாகப் பலர் குறிப்பிட்டனர். தனிமை, அச்சம், மனவழுத்தம், நம்பிக்கையீனம், சிதைந்த இலக்குகள் போன்ற உளவியல் மற்றும் சமூகத் தாக்கங்கள் பற்றிப் பலர் குறிப்பிட்டனர். மனநிலை ஸ்தம்பித்துப் போகுமளவுக்குச் சூழ்நிலை காணப்பட்டதாகச் சிலர் குறிப்பிட்டனர். அடுத்ததாக என்ன செய்வது என்பது பற்றிச் சிந்திக்கக் கூட முடியவில்லை எனச் சிலர் குறிப்பிட்டனர்.

வைரஸ் எப்போது எம்மை விட்டு நீங்கும் அல்லது நீங்குமா என்பது பற்றிய அச்சங்களும் சந்தேகங்களும் பகிரப்பட்டதுடன் நாம் வழிகாட்டல்களைப் பின்பற்றினால் பெருந்தொற்றினை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கையினைப் பலர் வெளியிட்டனர்.


ஆயினும், பெருந்தொற்றின் பாதகமான விளைவுகளைச் சுட்டிக்காட்டும் கருத்துக்கள் இருந்தபோதிலும், கீழே காட்டப்பட்ட சில சாதகமான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டமை சுவாரஸ்யமானதாக அமைந்தது.

“பெருந்தொற்று ஏற்பட்டது முதல், நாம் எமது உடல் ஆரோக்கியம் தொடர்பாக மிகவும் கவனம் எடுக்க ஆரம்பித்துள்ளோம். மேலும் கைகளைக் கழுவுதல் மற்றும் துப்பரவு தொடர்பாக எமது தனிப்பட்ட நடத்தையில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாடே தூய்மையடைந்துள்ளதைப் போன்ற சான்றுகளும் இதனுடன் சேர்ந்துள்ளன.’’

எமது வாழ்வின் மிக முக்கியமான அம்சங்களின் மீது பெருந்தொற்று எமது கவனத்தினை மீளச் செலுத்தவைத்துள்ளது.... சுகாதாரம் மற்றும் குடும்பத்தினருடன் நேரம் செலவழித்தல் போன்ற முன்பு புறக்கணிக்கப்பட்ட அல்லது பொருட்படுத்தியிராத விடயங்கள்.

வைரசினால் பாதிக்கப்பட்டோரை நாம் புறக்கணிக்கக்கூடாது. குடும்பத்தின் மீதான கவனக் குவிப்பே பொதுவான தொனிப்பொருளாக அமைந்திருந்தது. குடும்பம் பற்றிய கீழே வழங்கப்பட்டுள்ள கருத்தினைப் பங்குபற்றுனர்கள் வெளியிட்டனர்.

எதிர்காலத்தினைத் திட்டமிடவும் குடும்பத்தினருடன் நேரம் செலவிடவும் பெருந்தொற்று வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் வைரசினை ஒழிப்பதுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளவர்களைப் பொறுத்த அளவில், அவர்கள் தங்களின் பணியின் காரணமாகக் குடும்பத்தில் இருந்து விலகி இருந்து நீண்ட காலம் பணியாற்ற வேண்டியிருக்கின்றது. இக்காலப்பகுதியே மக்கள் குடும்பத்தின் உதவியினை நாடிய மற்றும் குடும்ப உதவியின் பெறுமதியினை மெச்சிய காலப்பகுதியாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.


S - 12 பொதுவான சிந்தனைகள்

Q 40 வினாக்கொத்தின் இப்பகுதியில் கொவிட் 19 தொற்றுப் பற்றிய உங்களின் பொதுவாக கருத்துக்களை நாங்கள் அறிந்துகொள்ள ஆர்வம் கொண்டுள்ளோம். கொவிட் 19 பற்றிய உங்களின் பொதுவாக கருத்துக்களை அல்லது வார்த்தைகளை எங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?

The above according my view. It is very dangerous but
If we follow the advices from the health department
we can safe our life and our nerbours too.
Better to wear a mask and avoid the common places
wich is most public gathering.

11

## முடிவு

கருத்தாய்வு கிட்டத்தட்ட 400 பங்குபற்றுனர்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் மக்களின் வாழ்வில் பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கம் பற்றிய தரவுகளை அணியினர் வெற்றிகரமாகச் சேகரித்துள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளைப் பொறுத்த அளவில், தொழிலின் மீது பெருந்தொற்றின் தாக்கம் கணிசமானதாக இல்லை. ஆயினும், இந்தப் பெறுபேறுகள் இதை விடப் பெரிய மாதிரியில் அல்லது வெவ்வேறு துறைகளில் தொழில்புரிபவர்களில் கவனம் குவிக்கும் மற்றொரு ஆய்வின் பெறுபேறுகளை விடப் பெருமளவில் வித்தியாசப்படலாம். மேலும், பலரும் வீட்டில் இருந்து வேலை செய்ய ஆரம்பித்துள்ளனர். அவர்கள் தங்களின் செயலாற்றுகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என அகவயமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்களின் சமூக வாழ்வினை ஆராய்கையில், பங்குபற்றுனர்கள் நாளாந்த அடிப்படையில் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுடன் பிரதானமாகத் தொடர்பில் இருந்திருப்பதும் ஏதாவது உதவி தேவைப்படுகையில் அல்லது ஏதாவது கவலைகளைப் பகிர்வதற்கு அவர்கள் அவர்களையும் நண்பர்களையும் நாடுவதற்கான சாத்தியத்தினைக் கொண்டிருந்திருக்கின்றனர் என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

கருத்தாய்வில் அவதானிக்கப்பட்ட வகையில், பங்குபற்றுனர்களின் மத்தியில் நிதி என்பது பாரிய கரிசனைக்குரிய விடயமாக இருந்திருக்கின்றது. பெருந்தொற்றின் பின்னர் பங்குபற்றுனர்கள் குடும்பச் செலவுகளைச் சமாளிப்பதற்குக் கஷ்டப்பட்டிருக்கின்றனர். பலர் தங்களின் வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்கக் கடன்களை பெற்றிருக்கின்றனர். நெருக்கடியின் போது தாம் பெருந்தொற்றில் இருந்து தப்புவதற்காக ஏனைய நிறுவனங்களிடம் இருந்து உதவி பெற்றதாகக் குறிப்பிட்டவர்கள் அரசாங்கத்தின் உதவி மிகவும் அணுகக்கூடியதாக இருந்ததாகக் குறிப்பிட்டனர். ஆயினும், பெரும் எண்ணிக்கையானோர் தாம் எவ்வித உதவியினையும் பெறவில்லை எனக் குறிப்பிட்டனர். மேலும், பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கான சமுதாய மட்ட நடவடிக்கைகள் அல்லது பொதுமக்கள் விழிப்புணர்வு மக்களில் 1/5 ஆனோரைச் சென்றடையவில்லை. மேலும் இந்த எண்ணிக்கை தொடர்பாடலிலும் இணைக்குந்தன்மையிலும் உள்ள இடைவெளியினைச் சுட்டிக்காட்டுகின்றது.

கொவிட்-19 சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்குப் பதிற்செயற்பாடாற்றுவதற்காகப் புதிய பழக்கங்களை கூட்டிணைத்ததன் மூலமும் பழைய பழக்கங்களைக் கைவிட்டதன் மூலமும் எமது பழக்கவழக்கங்களில் பல மாறியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. நம்பிக்கைவாய்ந்த பிரசைகள் என்ற ரீதியில் இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் பங்குபற்றுனர்களினால் அவர்களின் பொதுவான கருத்துக்களில் மேலும் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது. எனவே பெருந்தொற்று நடத்தை சார்ந்த சில மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

இந்தக் கருத்தாய்வின் நோக்கம் பிரசைகளை ஈடுபடுத்தி பெருந்தொற்றின் போதான அவர்களின் சாதகமான மற்றும் பாதகமான அனுபவங்கள் பற்றிய தகவல்களை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதாகும். இது அவர்களின் போராட்டங்கள் மற்றும் சவால்கள் மற்றும் மீண்டெழுந்தன்மை பற்றிய நுழைபுலங்களை வழங்கியுள்ளது. இந்தத் தகவல்கள் புத்திசாதுரியமாகப் பயன்படுத்தப்படுகையில் சமுதாயத்தின் தேவைகளுக்கு பதிற்செயற்பாடாற்றும் பொதுக்கொள்கைகளை வடிப்பதற்கு உதவக்கூடியதாக இருக்கும். பெருந்தொற்றின்போது, மக்களின் அனுபவங்களை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாதபோது கருத்தாய்வு அம்மக்கள் அவர்களின் குரல்களை வெளிப்படுத்துவதற்கும் அவர்களின் கதைகள் செவிமடுக்கப்படுவதற்கும் வாய்ப்பினை வழங்கியது.

## உசாவல்கள்

Our World in Data. (2021). *Coronavirus (COVID-19) Vaccinations*. Retrieved 26 February 2022, from https://ourworldindata.org/covid-vaccinations?country=OWID_WRL.

UNDP. 2022. *Socio-economic impact of COVID-19*. [online] Available at: https://www.asia-pacific.undp.org/content/rbap/en/home/coronavirus/socio-economic-impact-of-covid-19.html

UNICEF. (2021). *Sri Lanka and the COVID -19 crisis,* Retrieved 26 February 2022, from https://www.unicef.org/srilanka/media/1681/file/Impact%20on%20the%20incomes%20of%20Sri%20Lankan%20households.pdf.